7—10

1965 - ஜூலை

# வீட்டுக்கு ஒரு வாசிகசாலை

உங்கள் வீட்டு வாசிகசாலையில்
இடம்பெறவேண்டிய சிறந்த
மூன்று நூல்கள் இவை!

1 **கயமை மயக்கம்.**

வரதர் எழுதிய சுவையான
சிறுகதைகளின் தொகுப்பு
**விலை: 2.25**

போன்: 348

2 **சிலம்பொலி**

நாவற்குழியூர் நடராஜன் ஆக்கிய
அருமையான கவிதைக் கொத்து
**விலை: 1.75**

3 **சிலம்பின் சிறப்பு**

பொன் முத்துக்குமாரன் தரும்
தீஞ்சுவைச் சொல்லோவியம்
**விலை: 2.50**

## வரதர் வெளியீடு.

**226, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**



விலையுயர்ந்த மூலப்பொருட்களைக்கொண்டு
சுகாதாரமுறைப்படி சுத்தமாக
நவீன இயந்திரங்களினால் தயாரிக்கும்
BABY BRAND
பேபி மார்க் ஸ்பெஷல்
பானங்களையே அருந்துங்கள்
எல்லா இடங்களிலும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்
சுப்பிரமணியம் சோடாக் கம்பெனி
வல்வெட்டித்துறை
போன்: 97.
தந்தி: SODA
கிளை: ருஜுஸ்ரோர்ஸ்
2/B ஸ்ரான்லி ரோட்
யாழ்ப்பாணம்
போன்: 313.
தந்தி: ESVES.

மங்கையரின் அங்கம் ஜொலிக்க!
எங்கள் தங்க நகைகளை அணியுங்கள்!



ஜ விதவிதமான டிசைன்களில்

ஜ மாற்றுக்குறையாத தங்கத்தில்

ஜ மனதிற்கேற்ற ஆபரணங்கள்.

இன்றே வருக!
எங்களிடம் வருக!

நா. துரையப்பாப் பத்தர்
& சன்ஸ்

131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(Prop: து. வேணுகோபால்)



# FOR FASHIONABLE JEWELLERIES



*Visit*

# SURYA Jewellers

## Manufacturing Jewellers



**127, KASTURIAR ROAD,**
**JAFFNA.**

Phone: 7131

# தேவை!



○ உங்களுக்கு இன்றியமையாத தேவை உணவு அதற்கு அவசியம் தேவைப்படுவது நல்ல சத்துள்ள, சுத்தமான காய கறி வகைகள்!

○ உங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நாம் முன்வந்துள்ளோம்.

○ கோவா, முள்ளங்கி, கரொட், லீக்ஸ், போஞ்சி, முதலியவற்றை கொழும்பிலிருந்து ஒவ்வொரு நாளும் வரவழைத்து விற்பனை செய்கின்றோம்.

○ சுத்தமான, சிறந்த மலைநாட்டு மரக்கறி வகைகளை மிகவும் மலிவான விலையிலே விற்கின்றோம்.

○ தேவையான மலைநாட்டு மரக்கறிவகைகளை ஒவ்வொரு நாளும் எங்களிடமே வாங்கும்படி தனிப்பட்டவர்களையும் வியாபாரிகளையும் அழைக்கின்றோம்.



**FOR FRESH UP-COUNTRY VEGETABLES VISIT US.**

மேலாளர்:

## கூட்டுறவு மொத்த மரக்கறி விற்பனவு நிலையம்

**ஸ்ரேசன் ரோட் : சுன்னாகம்**

# அழைப்பு!

உங்கள் வீடுகளுக்கு நவீன முறையில் யன்னல் கிறில்கள், கேற்றுக்கள் செய்ய விரும்பு கின்றீர்களா?

உடைந்துபோன இரும்புத் தளவாடங்களை ஒட்டு வதற்கு விரும்புகின்றீர்களா?

இரும்புக் கம்பங்கள், கம்பிகள், குழாய்கள், வாங்க விரும்புகின்றீர்களா?

எங்களிடமே வாருங்கள்!

**மலிவானவிலையில் விரைவான முறையில் உங்கள் தேவைகளை நிறைவேற்றுவோம்.**

## வேலழகன் வெல்ட் சொப்

**காங்கேசன்துறை வீதி, : சுன்னாகம்.**

பாருக்கு ஒளி கொடுப்பது சந்திரன்!

ஊருக்கு ஒளி கொடுப்பது மின்சாரம்!!

உங்களுக்கு வழி அமைப்போம் நாங்கள்.

உங்களுக்குத் தேவையான

## மின்சார உபகரணங்களை

இலகுவாகவும் மலிவாகவும் எங்களிடம் பெறலாம்.

**மின்சார ஒப்பந்த வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

## "எலக்ரோ லக்ஸ்"

**காகங்சேன்துறை வீதி, : சுன்னாகம்.**

# யாழ்ப்பாணத்தில் வானொலி

"யாழ்ப்பாணத்தில் வானொலி நிலையமொன்றை அமைத்துத் தரும்படி நாம கேட்டுக்கொள்கிறோம்."

ஆண்டாண்டு தோறும் இங்குள்ள பல்வேறு கலாச்சார நிறுவனங்களும் ஏகமனதாக நிறைவேற்றியனுப்பும் தீர்மானம் இது.

அரசாங்கம் வழக்கம்போல், கவனிப்பதாகக் கூறிவருகிறதே தவிர, இதுவரை கவனித்ததாகத் தெரியவில்லை.

கொழும்பு நிலையத்தின் நிகழ்ச்சிகளை இங்குள்ளவர்களால் தெளிவாகக் கேட்கமுடிவதில்லை; அதேபோல் இங்குள்ளவர்களின் கோரிக்கைகளையும் அரசினரால் தெளிவாகக் கேட்க முடியவில்லையோ?

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரம், யாழ்ப்பாணம்; ஈழத்தமிழகத்தின் தலைநகரும் இதுவே.

இந்தப் பெருமைக்காக நாம் வானொலி நிலையம் வேண்டும் என வாதாடவில்லை.

இங்கே கலைஞர்கள் பலர் இருக்கின்றார்கள்; அறிஞர்கள் வாழ்கின்றார்கள். இவர்களின் அறிவும் திறமையும் இங்கேயே முடங்கிக் கிடக்கவேண்டுமா? ஈழத்தின் ஏனைய பகுதியிலுள்ளோர்க்குப் பயன்படக்கூடாதா?

இந்தக் கடமையுணர்விலேயே நாம் கேட்கின்றோம்; 'நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த மனப்பான்மையிலேயே நாம் கேட்கின்றோம்.

இந்த அறிஞர்களும் கலைஞர்களும் கொழும்புக்குச் செல்வதால், அவர்களுக்குப் பெரும் கஷ்டம்; பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அரசினர்க்குப் பெரும் நஷ்டம்.

இந்தக் கஷடத்தை நீக்கி, நஷ்டத்தையும் போக்கவேண்டுமானால் இங்கேயே வானொலி நிலையமொன்றை அமைக்கவேண்டும். அறிவைப் பரப்பும் ஆக்கப்பணியில் வானொலிக்கு முக்கிய இடமுண்டு என்பதை எவரும் மறுக்கமாட்டார்.

கலாச்சார நிறுவனங்கள், எழுத்தாளர் சங்கங்கள், நாடக சபாக்கள், இசைக்கலை மன்றங்கள், சனசமூக நிலையங்கள் மீண்டும் மீண்டும் தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பிக்கொண்டேயிருக்க வேண்டும்.

அழுதபிள்ளை பால் குடிக்கும்! அழுதாற்றான் பால் கிடைக்கும்




**தலை-வா!**

இன்றைய இலக்கிய ஏடுகளின் ஆசிரியர்களை, ஆசிரியர் தலையங்கங்களில் மட்டுமே காணமுடிகிறது. நம்முடைய இலக்கியப் பத்திரிகைகளின் ஆசிரியர்தலையங்கங்களுக்கெல்லாம்தலையாக விளங்குவது "கலைச்செல்வி"யினுடையது. எடுத்துக் கொள்ளும் பொருள், எடுத்துச் சொல்லும் விதம், சுவைக்க முடிகிறது.

திருநெல்வேலி. —தங்கவேல்.

**தலை-ரசிகர்.**

"இலக்கியமும் வாழ்க்கையும்"—தலையங்கம் இலக்கியத்தை உயர்த்துவதாக இருந்தது. பெரி. சண்முகநாதனின் "பெரிய ரசிகர்"—ரசிக்கக் கூடியதாக இருந்தது.

கந்தரோடை. —கா. சதானந்தன்.

**குகன் + கதை = வலி.**

புரட்டாதி "கலைச்செல்வி"யில் 'குகன்" எழுதிய நகைச்சுவைக் கதையைப் படித்துப் படித்துச் சிரித்துச் சிரித்து வயிறெல்லாம் புண்ணாகி வலி கண்டுவிட்டது.

உசன். —பாலசிங்கம்.

**ஒளிமயமான...**

கலைச்செல்வியே! புதிய பாதையை நோக்கிச் செல்லும் உனக்கு என் ஆசிகள். ஈழத்திருநாட்டில் இப்போது நீ சிறந்த இடத்தை வகிக்கின்றாய். உன் இளமைப் பருவம் குன்றாது புத்தொளி பெற்று இன்னும் சிறப்புடன் வாழ்வாயாக.

கைதடி. —கந்த. ஞானமுத்தன்.

**தொடர்-நடை!**

புத்தொளி வீசும் கதைகள்! கற்பனையூற்றுக்கள், நகைச்சுவையான கேள்வி-பதில்கள்—எல்லாம் எங்கள் மனத்தைக் கவர்ந்தன. "கலைச்செல்வி" வீறு நடை போட்டு ஈழமாந்தர்களின் தளிர்க் கரங்களில் தவழ எங்கள் ஆசியும் ஆதரவும் நல்குவோம். விரைவில் ஒரு தொடர் கதையையும் வெளியிடுங்கள்.

தண்ணீர்மலை —K. திராவிடத்தம்பி

**மலையெழுத்து!**

மலையக அன்பர்களின் கதை, கட்டுரைகளுக்கு நீங்கள் இடந்தர வேண்டும். "கலைச்செல்வி" மலையக மக்களின் கைகளிலும் தவழவேண்டும்; அவர்களை மலர்வித்து, மகிழ்விக்கவேண்டும்.

உடப்புசல்லாவை

R. பன்னீர்செல்வம்

**பிரம்மாவின் பிரம்மா!**

புரட்டாதி "கலைச்செல்வி"யில் மலைமதி சந்திரசேகரன் எழுதிய "பிரம்மா"என்ற கவிதை என் மனத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. எழுத்தாளன் யார், அவன் எவ்வாறு எழுத வேண்டும் என்பதை உறுதியாகவும் தெளிவாகவும் கவிஞர் கூறிவிட்டார்.

நாவலப்பிட்டி

—நா. பாலசுப்பிரமணியம்.

**சொல்லேருழவர்!**

இலக்கியச் செம்புலத்தில் தன் கை செங்கையாக ஆழ உழுது நல்ல விளைச்சல் கண்டுள்ளார் "செங்கை ஆழியான்". சான்று—புரட்டாதி "கலைச்செல்வி"யில் வெளியான "விளைபூமி".

கொழும்பு-13. S. நாகநாதன்.

# நல் முயக்கம்

-ஆசி. செல்வன்-

நாளெல்லா மின்பந்தோய் ஒளிவெண் முத்த
நகைவீசி யன்புந்த நறைசேர் வண்டாய்த்
தாளெல்லா மவள்நாமந் தனையே கீறித்
தறிசேர்ந்த நூலேயாய் இதயங் கல்லும்;
பாளெல்லா மவளில்லா வாழ்க்கை வீணே
பால்வதன விதழ்துள்ள வீசும் பார்வை
யாழில்லாப் பாணனெனும் நினைவையூட்ட
யானவளின் சொந்தமென இதயந் துள்ளும்,

∴ ∴ ∴

குவளைமலர் விழிமலர இதழில் இன்பக்
குறுநகையும் மின்னலிடக் குழிந்த கன்னம்
இதழைநிகர் செம்மையுற இதயங் கவ்வும்
இன்பமலர் அருகணைய இதயம் விம்மும்,
மதலைமொழி சிலபேசி மான்போ லஞ்சும்
மஞ்சுநிகர் குஞ்சியினைக் கையாற் கோதி
மதலையவள் விரல்பற்ற மருண்டு நோக்கி
மதுவுண்ட வண்டாக மயங்கிச் சோரும்,

∴ ∴ ∴

தேன்மலரின் சுவைகமழும் பொழிலினூடே
தென்றலிழும் இனிமையுடன் பொலிந்து இன்ப
வான்நிலவின் ஒளியினிலே வயங்கித் தோன்ற
வளியிடையே நுழையநல் முயக்கம் வாய்ந்த
மீன் விழியின் இதழ் மலரச் சிந்தை கவ்வும்
மென்மலரின் இதழ்விரியும்; மீட்டும் மெல்யாழ்
உளன் [குழைய உணர்வழிய உந்தும் ஆகம்
உவகையுற நினைவிழந்து இமைகள் மூடும்;

∴ ∴ ∴

செந்தமிழின் சுவையன்ன இன்பத் தேறல்
சய்யமலர்க் கமலத்துத் தெய்வ நங்கை
வந்தழலின் நிறையன்ன கற்புச் செல்வி
வேனில்மகள்; விண்ணுலகத் தழகுப் பேழை
முந்துணர்வின் வழியாயென் இதயஞ் சேர்ந்து
முகிழ்த்துவருங் கவியாயென் உயிரைத் தாங்கும்
சிந்தையினள் அன்புமலர் வசந்த மங்கைச்
செல்வமவள்; தமிழ்க் கவிதை; அழகுப்பாவை.

# பத்தாம் பக்கம்

நிருபர்: தங்களின் பெயரைக் "கலைச்செல்வி' அபிமானிகளுக்கு அறிவிப்பீர்களா?

கலைஞர்: ஈசுரமுனி.

நி: அது சொந்தப் பெயரா? அல்லது புனைபெயரா?

க: அதை அறிவிக்க விரும்பவில்லை,

நி: சரி! எழுத்துலகைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

க: அது ஒரு தனி உலகம் என் வாழ்க்கையே அதுதான். ஏன்! நானே அதுதானே...

நி: எல்லாரும் உங்களைப் போலத்தான்; எழுத்தாளர்களென்றாலே இலட்சியம் அது இது என்கிறார்கள்; அதுசரி சாப்பாட்டிற்கு என்ன தொழில் செய்கிறீர்கள்?

க: எழுத்துத்தான்!

நி: ஆ...!! எழுத்தாலேயா உங்களின் வாழ்க்கை நடக்கிறது? தமிழுலகில் அதுவும் ஈழத்தில்...?

க: என்ன... இப்படி ஆச்சரியப் படுகின்றீர்களே!

நி: வேறென்ன செய்வது? இன்றைக்கு எழுதத் தொடங்கினவன் விடிந்தால் மைவாங்க 'லாட்ரி' அடிக்கிறான். நீங்கள் அதனாலேயே வாழ்கிறேன் என்றால்...

க: எல்லாருமே எழுதினால் எழுத்தாகிவிடுமா? பாருங்க நேற்றுத்தான் 'மகரந்த'த்திலிருந்து 175 ரூபா வந்தது.

நி: உண்மையாகவா? சொன்னால் நம்பமாட்டீர்கள். இந்தப் பேட்டி எடுக்க வந்தேனே காசுக்கா அல்லது சம்பளமா...? சேச்சே இதுவும் விஷய தானம்தான்.

க: அடப்பரிதாபமே! அப்போ உங்களின் வருமானம்தான் எவ்வளவு?

நி: (என்ன செய்வது நான் கேள்வி கேட்பது போய் பேட்டிதர வேண்டியவரே என்னிடம் கேட்கிறார்... கஷ்டகாலம்) ம்...! 50, 60ரூபாயோடுசரிக் கட்டவேண்டியதுதான்.

க: என்ன கொடுமை! நான் சிலமாதங்களில் 600ரூபாயும்உழைக்கிறேனே.

நி: ஆ... அ... அடேயப்பா! (நிற்கும் மூச்சை இழுத்துப் பிடித்து நிறுத்தி) நீங்கள் சொல்வது... உங்களுக்கு நீங்களே ஏன் இன்னமும ஒரு தனிப் பெரும் விழா எடுக்காதிருக்கிறீர்கள்...?

க: இதென்ன பிரமாதம்? போனமாதம்தான் 'மல்லிகா' முதலாளியே நேரில் வந்து சொல்லிவிட்டு உடனே 225 ரூபாவும் தந்துவிட்டுப் போனார். ஒரே வாரத்தில் எழுதிக் கொடுத்தேன். 'வசந்தம்', 'வித்தியா', 'பூமாலை', 'மனோரஞ்சிதம்' 'சுவர்க்கம்' 'காஞ்சனா', 'மணிமேகலை', 'வீணை' எல்லாவற்றிற்குமே எழுதியிருக்கிறேன். ஆனால் 150 ரூபாவுக்குக் குறைய நான் எழுத நினைப்பதுவும் இல்லை. எழுத்துலகிலேயே நான் ஒரு ஜாம்பவான். இதை நீங்கள் தற்பெருமையாக எண்ணக்கூடாது ..

நி: இத்தனை சஞ்சிகைகளிலும்...

க: சஞ்சிகைகளா? சரியாப் போச்சுபோங்க. எல்லாம் 'டெக்ஸ்டைல்ஸ்' 'ஓட்டல்' கடைகளின் பெயர்கள். ஓ... மறந்துவிட்டேனே... கலை இலக்கிய ஏடு என்று ஒரு பேப்பர்க்காரன் எழுதச் சொன்னான், எழுதினேன், பதினைஞ்சு ரூபாய்தான் தந்தான். தெரிந்திருந்தால் 'பிறஷ்' பிடித்திருக்கவே மாட்டேன்; என்ன செய்வது 'போடா' என்று விட்டு விட்டேன்; "போட்" எழுதுவதென்றால் சும்மாவா பின்னே?

# பாராட்டுகின்றோம்


இவ்வாண்டு சாகித்திய மண்டலப் பரிசுகள் தமிழ் எழுத்தாளர் மூவர்க்குக் கிடைத்துள்ளன.

நவாலியூர் நடராசன், முன்பும் ஒருதடவை பரிசு பெற்றவர்; பெரிய அறிஞர், நல்ல கவிஞர்; வடமொழியிலிருந்து பல நூல்களைத் தமிழிற் பெயர்த்துள்ளார் சிந்தனையைக் கிளறும் கருத்துக்களை அடிக்கடி வெளியிட்டு வருபவர். "பொம்மை வண்டி" கலைநயம் குன்றாத மொழிபெயர்ப்புக்குச் சான்று.


பண்டிதர் வி. சீ. கந்தையா சிறந்த அறிஞர். பட்டங்கள் பல பெற்றவர் கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழ்த்தொண்டியற்றுபவர். ஆழ்ந்த ஆராய்ச்சிக்கும் நிறைந்த தமிழ்ப்பற்றுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது அவருடைய "மட்டக்களப்புத் தமிழகம்"

அமைதியாக இருந்து தமிழன்னைக்குத் தொண்டு செய்பவர் புலவர் சின்னையா அவர்கள். அவருடைய 'கதிரைமலைக்கோவை' பக்தி கனிந்த தமிழ் உள்ளத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. அமிழ்தத் தமிழால் அழகிய முருகனைப் பாடியுள்ளார்.

இம் மூவரையும் பாட்டுவதில் நாம் பெருமையடைகின்றோம்.



யாழ் மாநகர சபையினர் இவ்வாண்டு முதன் முதலாகச் சாகித்திய விழாவைச் சிறப்பான முறையிலே கொண்டாடினர். விழாவிற்கு நகரமுதல்வர் திரு. மகாதேவா தலைமை தாங்கினார். விழாவில் செல்வி புஷ்பா செல்வநாயகம் B. Sc. சொற்பொழிவாற்றுவதையும் நகரமுதல்வர், ''சுகாதார ஒலி'' ஆசிரியர் யாழ்வாணன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.




யாழ்ப்பாணத்து உயர்குடியிற் பிறந்த அவர் ஒரு. எம். ஏ. பட்டதாரி. யாழ்–பரி யோவான் கல்லூரியில் அப்போது ஆசிரியராக இருந்தார்; வீட்டிலே போதிய இடவசதியிருந்த காரணத்தால், தன் வீட்டில் மாணவர்கள் ஓரிருவரைத் தங்கிப் படிக்கச் செய்தார். மாணவரைத் தெரிவுசெய்யும்போது முதன் முதலில் அம்மாணவனின் சாதியைப் பற்றி விசாரிப்பார். உயர் சாதி மாணவர்க்கு அவர் வீட்டில் இடம் கிடையாது. தாழ்த்தப்பட்டவர்களையே விரும்பித் தெரிவு செய்வார். எவ்வித பாகுபாடும் காட்டாது, தன் குடும்பத்தில் ஒருவராகவே மாணவரை நடாத்துவார். மேடைகளில் முழங்காது, மிகவும் அமைதியான முறையில் இச்சாதனையைச் செய்தவர் யார் தெரியுமா? அவர்தான் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்துக் கல்விப் பகுதியில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றியவரும் இப்போது ''கூட்டுறவாளன்'' இதழின் ஆசிரியராகவும் பணிபுரியும் திரு. கு. நேசையா அவர்கள்!

∴ ∴ ∴

கலப்புமணத்தின் மூலம் சாதிக் கொடுமைகளையும் தீண்டாமையையும் ஒழிக்கலாமெனக் கூறிய காந்தியடிகள், தன் மகன் கலப்பு மணம் செய்ய முன்வந்தபோது, அனுமதி வழங்க முதலில் மறுத்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? காந்தியடிகளும் ராஜாஜியும் நெருங்கிய அரசியல் நண்பர்கள். காந்தியடிகள் வடநாட்டு வைஸ்ய வகுப்பினர், ராஜாஜியோ தென்னிந்தியப் பிராமணர். காந்தியடிகளின் மகன் தேவதாசும் ராஜாஜியின் மகள் லட்சுமியும் ஒருவரையொருவர் உள்ளன்புடன் காதலித்தனர். ஆனால் காந்தியடிகள் அக்காதலை ஆதரிக்கவில்லை. பெற்றோர் செய்துவைக்கும் திருமணமே சிறந்தது என்ற நம்பிக்கை அவரிடமிருந்தது. ஆனால் காதலர்களின் தீவிரத்தைக் கண்ட தந்தையர் இருவரும் ஒரு நிபந்தனையின் பேரில், திருமணத்திற்கு இணங்கினர். காதலர்கள் இருவரும் ஐந்து ஆண்டுகளுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லாது பிரிந்திருக்கவேண்டும்! அந்தப் பிரிவின் பின்னரும் அவர்கள் அன்பு வற்றவில்லையென்றால் திருமணம் நடைபெறும்! அந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்ட தேவதாசும் லட்சுமியும் பிரிந்திருந்தனர். ஐந்து ஆண்டுகளின்பின் அவர்களின் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அத்தம்பதிகளின் பிள்ளைதான், சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த ராஜ்மோகன் காந்தி அவர்கள்!

∴ ∴ ∴

சிங்களம், சிங்கள இனத்தின் தாய்மொழி என்று எப்படிக் கூறுவது? சிங்களவர்களின் மூதாதையரான விஜயனும் தோழர்களும் தோணிகளில் வந்திறங்கியவர்கள். அவர்களே சிங்கள மொழியை உருவாக்கியவர்கள். அவர்களின் மனைவிமார், தென்னிந்தியப் பாண்டிய அரசைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள். ஆகவே சிங்களம், சிங்கள

வரின் "தந்தைமொழி" என்றுகூறுவதே பொருந்தும்!

— அமெரிக்க கலாச்சார நிலையச் சொற்பொழிவில் சார்ஸ் டீ சில்வா பேசியது.

∴ ∴ ∴

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கண்டியிலே பிறந்தவர். சந்திரபாபு கொழும்பிலே படித்தவர். தவமணி தேவி இங்கிருந்து தென்னகம் சென்று நடித்தவர். 'சாரு' தமிழகத்தில் நடித்துவிட்டு இலங்கை வந்தவர், இவர்களைப்போல், இப்போது பிரபல திரையுலக நடனமணிகளாகத் திகழும் சாயி சுப்புலட்சுமி சகோதரிகளுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. யாழ்ப்பாணக் கோவில்களில் "சின்னமேள"த்திற்கு 'மௌசு' இருந்த காலத்தில், 'பண்ட்ருட்டி செற்' பிரபலமாயிருந்ததல்லவா? அந்த செற்' றிலிருந்து நாட்டியமாடிய ஆதிலட்சுமி அம்மாளின் புத்திரிகளே சாயி-சுப்புலட்சுமி சகோதரிகள்!

∴ ∴ ∴

பாகிஸ்தான் அதிபராகவுள்ள ஜெனரல் ஆயூப்கான், சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதம தளபதியாக விருந்த கரியப்பாவின் கீழ் முன்னர் ஒரு சாதாரண இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார்!

∴ ∴ ∴

லங்கா (Lanka) என்பது எப்படி வந்தது தெரியுமா? ILAN-KAI – இலங்கை – என்பதின் இரு பக்கங்களிலுமுள்ள I என்ற எழுத்தை எடுத்துவிட்டதனால்த்தான்!

—மு. கனகராஜன்

காந்தியடிகளின் அமுத வாக்கு இது:– ஒரு குடும்பத்தில் தப்புப்பண்ணும் குழந்தையைத் தகப்பன் அடிக்கும்போது குழந்தை, பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று நினைப்பதில்லை. குழந்தை, தகப்பனுக்குக் கீழ்ப்படியவே செய்கிறது. ஏன்? அடிபட்டதனால் அன்று. அடியின் பின்னணியிலுள்ள அன்பின் காரணமாகத்தான். சமூகம் எப்படி ஆராயப்படவேண்டும், என்பதற்கு இதுவே உதாரணமாக இருக்கவேண்டும். குடும்பத்துக்கு எது உண்மையோ அதுவே சமூகத்திற்கும் உண்மையாக இருக்க வேண்டும். சமூகம் என்பது பெரிய குடும்பமேயொழிய வேறில்லை"

ஊரெழு அ. கனகசூரியர்.

∴ ∴ ∴

"கனவு உலகம்" என்ற நூலை எழுதி உலகப்புகழ் பெற்றவர் சர் தோமஸ் மூர். இங்கிலாந்து மன்னன் எட்டாம் ஹென்றியின் மந்திரியாக இருந்தவர், முதலாம் பிரான்சிஸ் என்பவன் பிரான்ஸ் நாட்டின் மன்னனாக இருந்தான். அவன் முற்கோபத்திற்குப் பேர்போனவன். ஒரு சமயம் எட்டாம் ஹென்றி, கடிதம் ஒன்றை மூரிடம் கொடுத்து, நேரிற் சென்று பிரான்சிஸிடம் சேர்ப்பிக்குமாறு பணித்தான். கடிதத்தைப் படித்த மூர், "இக்கடிதத்தைப் பிரான்சிஸிடம் கொடுத்தால், என்தலை என் உடம்பில் தங்காது" என்றான், அதற்கு ஹென்றி 'பயப்படாதே, இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு பிரான்சியனது உயரத்தில், தலையளவு குறையச் செய்வேன்" என்றான். அதைக்கேட்டமூர் "அதில் எனக்குச் சந்தோஷந்தான். ஆனால் அத்தலைகள் எதுவும் என் கழுத்துக்கு அளவுள்ளதாக இருக்காதே!" என்றான்.

குன்றக்குடி

# வயலின் வைத்தியநாதன்

## பேட்டி: எம். கே. ராஜா

பிரபல பின்னணிப் பாடகர் சௌந்தரராஜன் நம் நாட்டிற்கு வந்திருந்தபோது அவரின் பாடல்களை விட கச்சேரிகளில் வயலின் இசைத்தவரைப் பற்றித்தான் பிரமாதமாகப் பேசிக்கொண்டார்கள். அத்தனை தூரம் அவர் தமது வயலின் நரம்புகளால் இரசிகர்களின் இதயங்களையெல்லாம் பிணைத்துச் சென்றார். அவர்தான் 31 வயதே நிறைந்த பிரபல வயலின் வித்துவான் குன்றக்குடி வைத்தியநாதன் அவர்கள்.

இசையுலகில் தனக்குக் குரு தன்னுடையதந்தைதான் எனக் கம்பீரமாகவும் பெருமையாகவும் அறிவித்துக் கொள்ளும் இவர் இந்திய வானொலியின் இசைநிகழ்ச்சிகளைக் கேட்பவர்களுக்கு மிகவும் பிரபல்யமானவர். ஆமாம்! 1947ம் ஆண்டு தொட்டே ஏறக்குறைய 18 ஆண்டுகள்வானொலியில்வயலின் இசைத்து வருகிறார். இன்று வேகமாக சினிமா உலகில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கிறார்.

கே: இசையுலகில் எப்போது பிரவேசித்தீர்கள்.

ப; என் இலட்சியமே இசைக் கலைஞனாவதிலிருந்ததால் ஒன்பதாவது வயதிலேயே இசை என்னை அணைத்துக் கொண்டது.

கே: சினிமாப் பிரவேசம்...?

ப: 1952 டிசம்பரில் சிதம்பரத்தில் நடந்த ஒரு கச்சேரிக்கு வந்திருந்த சூலமங்கலம் இராஜலட்சுமி சகோதரிகள் எனது வயலினிசையையும் திறமையையும் அனுபவித்ததின் பயனாகத் தங்களின் கச்சேரிகளுக்கும் என்னை அழைத்தனர். அதைத் தொடர்ந்து அவர்களால் நானும் ஒரு சினிமாக் கலைஞனானேன்,

கே: தனித்தேதான் இசைப்பணி புரிகின்றீர்களா?

ப: இல்லை! கே. வி. மகாதேவன் எஸ். எம். சுப்பையா நாயுடு போன்றோரின் குழுக்களில் 4 ஆண்டுகளிருந்தேன். தற்போது சௌந்தரராஜன் குழுவிலேயே இருக்கிறேன். அனேகமாக இன்றைய பிரபல எல்லா மியூசிக் டைரக்டர்களோடும் பணியாற்றியிருக்கிறேன்.

கே: உங்களுக்குப் பிடித்த வயலினிஸ்டுகள் யார்?

ப: கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை, துவாரம் வெங்கடசாமி நாயுடு, என்பார்தான். திரு. வெங்கடசாமி நாயுடு அவர்கள் பிரமாதமான கலைஞர். அவரின் பாணியைத்தான் நானும் பின்பற்றுகிறேன்.

கே: தமிழக நடிகர்கள் பற்றித் தங்கள் அபிப்பிராயம்...?

ப: தனித்தனியேஒவ்வொருவரையும் பற்றிப்பக்கம் பக்கமாகச்சொல்லலாம். சிவாஜி ஒரு "இன்டர்நேஷனலிஸ்ட்" எனவே அதிகம் வேண்டாம்.

எனக்கு மிகவும் பிரியமானவரும் பிடித்தமானவரும் மக்கள்திலகம் எம். ஜி. ஆர்தான், இப்படியான அருமையானகலைஞருக்குக்கலாதேவி அற்புதமான நடிப்பாற்றலையும் கொடுக்கவேண்டுமே என்று வேண்டிக்கொண்டிருந்தேன். அது வீண் போகவில்லை. இப்போது அவர் தன் நடிப்பில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். ''எங்க வீட்டுப் பிள்ளை"யில் எம். ஜி. ஆரின் நடிப்பு முத்திரை பெறுகிறது, அந்த நடிப்பில் மயங்கி இப்படியும் ஒரு நடிகரா என வியந்தேன். நல்ல அந்தக் கலைஞர் நலனோடு நீடூழி வாழவேண்டும்.

கே: எப்படியான பாடல்களில் விருப்பம் உங்களுக்கு?

ப: கர்நாடக இசை கொண்ட பாடல்கள்.

கே: முதன்முதல் எந்தப் படத்திற்கு வயலின் வாசித்தீர்கள்?

ப: விளையாட்டுப் பொம்மை படத்தில்.

கே: தற்போது தாங்கள் இசையமைக்கும் படங்கள்...?

ப: ஓரியண்டல் மூவிஸ் படம், சுப்புராமன் டைரக்ட் செய்யும் S. A. S. ஆர்ட் சென்டரின் 'பார்த்த முகம்'. இன்னும் பெயரிடப்படாத பல படங்கள்.

கே; சொந்தத் தயாரிப்புகளும் உண்டா?

ப: என்னுடைய குழந்தையின் பெயரில் ஆரம்பித்திருக்கும் பானு ரிக்ரியேஷன்ஸ் நாடகக் கம்பனியின் முதல் தயாரிப்பாக 'ஓவியன் மகள்' தயாராகிறது. கள்ளபார்ட்நடராஜன் எஸ். விஜயகுமாரி, கண்ணன், வி. ஆர். திலகம் ஆகியோர் என் நாடக நடிகர்கள்.

ஆலங்குடி சோமு பாடல்களியற்றியுள்ள 'கணணும் இமையும்' நாடகத்திற்கும் மியூசிக் டைரக்டர் நான்தான்.

கே: உங்களின் வயலினிசை மாத்திரம் கொண்ட சினிமாப்பாடல்களுமுண்டா?

ப: ஓ......! நிறைய! ஆர்ச்செஸ்ட்ராவுடன் எவ்வளவோ வாசித்துண்டு,

'கருமை நிறக்கண்ணு'— 'அத்தைமடி'—'பக்கத்துவீட்டு பருவ மச்சான்'—'ஒருபெண்ணைப் பார்த்து' —'என்னதான் நடக்கும்..'— 'பொன்னை விரும்பும் பூமி—'போன்றவை. 'வாடியம்மா வாடி' என்ற சடுகுடு பாட்டை வயலினில் வாசிப்பதே கஷ்டம்: அதையும் என் தந்திகளில் சிறைபடுத்தியுள்ளேன்.

கே: அதை மாத்திரமா? ஈழத்து இரசிகர்களினிதயங்களையு மல்லவா அந்த வயலினில் சிறைபிடித்துவிட்டீர்கள். அவர்களுக்கும் 'கலைச்செல்வி' அபிமானிகளுக்கும் ஏதாவது சொல்லுங்களேன்...

ப: ஆ...ஹ்...ஹ...(இசைச் சிரிப்புத்தான்) கலைச்செல்வி மிகவும் பிடித்திருக்கிறது. முன்பு இந்தியாவிலேயே ஒன்றிரண்டு பார்த்திருக்கிறேன். அதனால் தானே ஆரம்பத்திலேயே நானும் ஒரு சந்தாதாரனாகி விட்டேன்


உங்களுக்கு அறிஞரினதும் கலைஞரினதும் ஆசி எப்போதும் இருக்கிறது. எனவே தமிழையும், கலை

களையும் வளர்க்கவேண்டும். கர்நாடக இசை நமது மகத்தான பொக்கிஷம். அதைசெல்லரிக்கவிடக் கூடாது. சினிமாவில் அந்த இசையை நிறைய வரவேற்று வளர்க்க வேண்டும். இதுவே என் அன்பு வேண்டுகோள்.

குன்றக்குடி வைத்தியநாதன்
வயலின் வித்துவான்
26. மேற்கு சர்குலர் தெரு,
மந்தை வெளிப் பாக்கம்,
சென்னை-28

என்ற முகவரியைக்குறித்துக்கொண்டேன்.

பின்னர் எனக்குப் பிடித்தமான சில பாடல்களையும் இசைத்துக் காட்டினர். நானே அம்மோகன இசையில் என்னையே மறந்தேன். ஆயின் திரு. வைத்தியநாதனையோ அவர்தம் கந்தர்வ இசையையோ மறந்திலேன். ஏனெனில் வயலினை அவர் வருடும் போதெல்லாம்—தீண்டும் போதெல்லாம்—இன்னிசையை மாத்திரம் பிறப்பிக்கவில்லை அவர் தெய்வீக இசைச் சொற்களையெல்லாம் கவிதை செய்கிருர்.



பட்டு பிலிம்ஸாரின் "நீலவானம்" படத்தில் நடிகர் திலகம் சிவாஜிகணேஷனும் தேன்மொழியாள் தேவிகாவும் மிகச் சிறப்பாக நடித்துள்ளனர்.


# நம்நாட்டு வாசகர்

இன்றைய ஈழத்து இலக்கிய உலகிலே பல சஞ்சிகைகள் பவனி வருவதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். இவ்வித சஞ்சிகைகள் வாசிக்கும் பலருள், அதுவும் இலக்கிய ஆர்வம் உள்ள வாசகர்களுள் நானும் ஒருவனாக இருப்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன்.

நான், கலைச் செல்வி, கதம்பம், கலைவாணி, இளம்பிறை, விவேகி போன்ற சஞ்சிகைகளையே ஒழுங்காக வாசித்து வருகிறேன். சிலவேளைகளில் வெளிநாட்டுச் சஞ்சிகைகளான குமுதம், கல்கி போன்ற சஞ்சிகைகளையும், வாசித்து இலக்கிய ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்வேன்.

இவ்வகைச் சஞ்சிகைகளுள் கலைச் செல்வி முக்கியஇடத்தை வகிக்கிறது. "பத்தாம் பக்கம்" என்ற அம்சம் எனக்குப் பிடித்தமான அம்சமாகும். மற்றும், "பேரும் பரிசும்" என்றபோட்டியும் என்னிடம் உள்ள இலக்கிய ஆர்வத்தைப் பெருக்கும சாதனமாய் இருக்கிறது.

இளம்பிறை சஞ்சிகையில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது, மஹாகவியின் குறும்பா அம்சமே. சிரிக்கவும் சிந்திக்கவும் செய்யும் ஒரே ஒருகாவியம் குறும்பாஅம்சமே.



அ. கனகசூரியர்
"அருள் வாசா"
ஊரெழு,

நமது ஈழநாட்டில் இன்று எத்தனையோ எழுத்தாளர்கள் தங்களது கற்பனைச் சக்தி மூலம் பல இலக்கியப் படைப்புக்களைச் சஞ்சிகைகளின் வாயிலாகப் படைக்கிறார்கள். இவற்றை ஆவலுடன் வாசிக்கிறேன். அதுமட்டுமா? இவற்றைப்பற்றி சிந்திக்கிறேன்,

இலக்கியக் கருத்துக்கள் எங்கேயொரு பத்திரிகையிலோ, அல்லது சஞ்சிகைகளிலோ மறைந்து இருக்கிறதோ அவற்றைக் கண்டுபிடிக்கத் தவறமாட்டேன். அத்துடன் அவற்றில் பொதிந்திருக்கும் இலக்கியக் குறிப்புகளை ஆராய்ந்துபார்த்தே விடுவேன்.

கடைசியாக ஒன்று. ஈழத்தில் வெளியாகும் சஞ்சிகைகளுக்கு பார்த்தவுடன் கண்ணைக் கவரும் பகட்டுச் சக்தி இல்லை. அதனாலேதான், பலவாசகர்கள், இந்தியப் பத்திரிகைகளை மட்டுமே வாங்குகின்றார்கள். அவர்களில் எவ்வித குறையையும் நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அவர்கள் ஆகக்குறைந்தது ஒரு ஈழத்துப் பத்திரிகையையாவது வாங்கிப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டுப் பத்திரிகைகள் வளர்ச்சியடைய நம் நர்ட்டு வாசகர்கள் தானே உதவ வேண்டும்?

# பெண்

**இ. சற்குணநாதன்**

செல்வத்தால் அந்தக் காட்சியை நம்ப முடியவில்லை. நம்பாமல் விடவும் நியாயமில்லை. வேற்று மனிதரின் வாய்ச் சொற்கள் பொய்யாகலாம். அவனது கண்களின் பிரத்தியட்சமான பார்வையே தவருகுமா?

அது பொய்யில்லை. நிதர்சனக் காட்சியின் மெய் வண்ணங்கள் இன்னும் இதயத்தில் அப்பியிருந்தன. அடிவானத்தின் நிலமட்டத்தில் கைக்கிடையே அவன் நினைத்தான்; 'நான் ஏன் அழவேண்டும்? சுசீலாவுக்கும் எனக்கும் அப்படி என்ன உறவு? எங்கிருந்தோ வந்தாள். எப்படியோ போகிருள். இடையில் அவள் பாதையில் குறுக்கிட நான் யார்?'

மனம்தான் குரங்கென்பார்கள். செல்வத்தின் கண்களும் குரங்கு போலும். தூரத்தில் தெரிந்த மாதா கோவில் சந்தின் மேல் அவன்

---

உள்ளன்புடன் நேசித்த தன் காதலனை விட்டுவிட்டு அவள் ஏன் வேறு ஒருவனுடன் தொடர்பு கொண்டாள்? பெண் என்ற நிலையில் பேணப்படவும், ஆண்மகன் ஒருவனுல் ஆளப்படவும் விரும்பிய ஒருத்தியின் கதையைச் சுவையுடன் கூறுகின்ருர் இலங்கைப் பல்கலைக் கழக மாணவன் சற்குணநாதன்.

---

நிலை குத்திய நயனங்களைப் பெயர்த்தெடுத்து வீதியின் மறுமுனைவரை நோட்டமிட்டான்.

தூரத்தில் சுசீலாவும் மனேகரனும் கைகோத்தபடியே சென்று கொண்டிருந்தனர்.

அவமானமும், ஏமாற்றமும் அவனுள் மாருத நமைச்சலை ஏற்படுத்தின. வளைந்து செல்லும் மாதா கோவில் சந்தில் அவர்கள் நுழையும் வரையில் கட்டுப் பட்டிருந்த கண்கள் மடை திறந்து கன்னங்களிலும் மார்பிலும் மாலை மாலையாய்க் கண்ணீர் உருண்டது. அழு பார்வை திரும்பவும் ஏன் மேய வேண்டும்?

அவனுக்கு இதயம் திக்கென்றது

அந்தச் சந்தின் சரித்திரப் பிரசித்தமான தலவிசேடம் முழுவதும் அவனுக்குத் தெரியும். இடையில் குறுக்கிடும் திருப்பங்களினதும் முடக்குகளினதும் முக்கியத்துவம் காதலர்களுக்குத்தான் தெரிந்திருக்க நியாயமுண்டு. அவனும் அறிவான்.

எத்தனையோ நாட்கள் சுசீலாவும் அவனும் அதனூடே சென்று மறுமுனையில் பிரதான வீதியில்

மிதந்திருக்கிறார்கள். அருகருகே பக்கவாட்டில் சென்றால் ஒருவரை மற்றவர் பிடித்துக்கொண்டே விலகிச் செல்ல வேண்டியிருந்த அந்த ஒற்றையடிக் குச்சொழுங்கை யுள் அவன் சுசீலாவின் முன்னே அல்லது பின்னாலேயே தான் வருவான். ஆசையும், அந்தரங்க உணர்களும் அடித்துக் கொள்ளும் வேகத்திற்கு அவயவங்கள் துணை நின்றால் தானே! சுசீலாவே முதலில் சீண்டுவாள்.

“இதனுள்ளே நடந்து வரும் போது உங்களுக்கு எப்படியிருக்கிறது?”

“ஒரே பயமாயிருக்கிறது”— அவன் அசட்டுத்தனமாகப் பதிலளிப்பான். தொடர்ந்து கேள்வி கிளம்பும்.

“அப்படியானால் ஏன் இந்த வழியால் வந்தீர்கள்?”

“நீர் வரச் சொன்னீர். வந்தேன்.”—அவனது பதிலில் பணிவும் அப்பாவித் தன்மையும் விரவியிருக்கும். அவள் முகத்தை ‘உம்’ என்று வைத்துக் கொண்டு சிணுங்கிய வண்ணம் கூறுவாள்.

“உங்களுக்கு எத்தனை நாள் சொல்லியிருக்கிறேன், இந்த ‘நீர்; நீங்கள்’ என்ற மரியாதைப் பதங்களை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு நீ என்று உரிமையுடன் அழைக்கவேண்டுமென்று.”

அவள் பேசிக்கொண்டே செல்வத்திற்கு அருகில் வருவாள். கூந்தலில் தடவிய வாசனைத்தைலநெடி அவனது மூக்கைத் துளைக்கும்.

“இனிமேல் அப்படியழைக்க முயற்சி செய்கிறேன்.”—அவன் தடுமாற்றத்துடன் பதிலளிப்பான். சுசீலா நெருங்கி வந்து அவனது கரங்களைப் பற்றுவாள். அவன் சிறுகுழந்தையைப்போல் அவளது இழுப்புக்கெல்லாம்ஈடுகொடுப்பான்.

இதெல்லாம் ஏன் இப்போது?

இன்று அந்தச் சந்தினுள்ளேயே மனோகரனுடன் அவள் செல்கிறாள் சாதாரண மக்களுக்கு அது பெரிய விஷயமல்ல; மாதாகோவிலின் இடதுபக்க மதிலோரமாய் தொடங்கும் சந்து சாந்தி தியேட்டரின் வலது கோடியில் பிரதான வீதியைத் தொடுக்கும் என்பது வரையில்தான் அனைவருக்கும் தெரியும். ஆனால், முடக்குகளின் முக்கியத்துவமறிந்த அவனது இதயம் அங்கலாய்த்தது.

வெறிபிடித்தவன் போல் விரைந்து சென்று மாதா கோவிலை அண்மினான். முதலில் தெரியும் சந்தின் திருப்பம் வரையில் ஊடுருவி நோக்கினான். இடையில் மனித நடமாட்டமே இல்லை.

‘இந்நேரம் அவர்கள் வேப்பமரத்தடியின் இருளடைந்த முடக்கு வரை சென்றிருப்பார்கள்.’

இந்த எண்ணமே தீயாய் எழுந்து உதிரத்தை அவித்தது. கோவிலினுள் சுடர் விடடெரியும் மெழுகு வர்த்திகள் தசை தீயும் நாற்றத்தை ஈய்வதாய்ப் பிரமை தட்டியது.

அவன் திரும்பி நடந்தான் நோக்கமின்றி அலைந்து சென்ற நினைவுகள் இறப்பர்த் துண்டாய் இழுபட்டன.

மாம்பழம் போல் கொழு கொழு

வென்ற கன்னங்களும், அங்கு மிங்கும் அலைபாயும் நயனங்களும் நீண்ட கூர்மையான நாசியும், சுருண்ட கேசமும் செல்வத்தின் தனிச் சொத்து. சாயலில் அவன் பெண்களை ஒத்திருந்ததால் இள வயதில் சில ஆடவரின் அன்புக்கும் அதீத பிரியத்திற்கும் பாத்திரமாய் இருந்தான்.

இது பழங்கதை.

எப்படியோ படித்துப் பயிற்றப் பட்ட ஆசிரியராய் வெளிவந்த பின் கூட அவனது இயல்பு மாறவில்லை. அரும்பு மீசையும், திரண்ட உட லமைப்பும் வயதின் வளர்ச்சியைக் காட்டவில்லை. எவருக்கும் எப் போதும் பணிந்து நடக்கும் சுபாவம் அவனுயிருடனேயே ஒட்டிக் கொண் டதோ என்னவோ?

ஒரு வருடத்திற்கு முன்தான் அந்தக் கல்லூரியில் அவன் ஆசிரிய ராய் நியமனம் பெற்றான். ஆசிரியர் குழுவிலிருந்த பதின்மூன்று பெண் களில் சுசீலாவை மட்டும் அவனுக்கு ஆரம்பத்திலேயே பிடித்துவிட்டது. நெருங்கிப் பழகாமல் முதல் பார்வை யிலேயே ஒருவரை இதயம் விரும்பு கிறதென்றால் அவருக்கு அழகும், கவர்ச்சியும் இருக்கிறதென்றுதானே பொருள். சுசீலா அழகிதான்.

அவனாகவும் நெருங்காமல் அவ ளாகவும் விலகாமல் காலகதியில் அவர்களது பழக்கம் வளர்ந்தது. ஒரு நாள் தலைமை அதிபர் செல் வத்தை அவசரமாக அழைத்தார். அவனும் தயங்கிக்கொண்டே அலு வலகத்திற்குள் நுழைந்தான்.

தலைமை அதிபரிடமிருந்து குற்றச்சாட்டை அவன் எதிர்பார்க்க வில்லை. சுசீலாவுக்கும் அவனுக்கு

## தளிர் நடைமுன்...

தேன்குழைத்த அவள்மேனி
முன் நான் வண்டு,
தென்றலுக்கும் மாப்பிள்ளை
அதனால் இன்று,
நானிசைக்கும் ராகத்தில்
காதல் கொண்டு
நாணியவள் தலைசாய்ந்த
தொன்றே தொண்டு
"ஏனாடல் இல்லை"? எனச்
சோர்ந்து நின்ற
எழில் மங்கைமுன்னிலையில்
கவிதைச் சாறு
வானூறும் மழைபோல
உருவம் பெற்று
வயற் காட்டிற் கருள் பெய்த
நதியாயூறும்

∴

பல்கலைகள் அறியாத
பாவைக் கூடு
பரிசளிக்க ஒண்ணாத
பட்டிக்காடு
மெல் கலைகள் கவிதையிலே
சுவைத்தபேடு
மெய் ஞானத் தேர்வோடு
புகுந்த சோடு
வெண்ணிலவு ஒளிதேக்கிக்
குளிரைப் பெய்து
வெள்ளை நிற உள்ளத்தால்
அகந்தை கொய்து
தன் திறனைக் காட்டிவிட்ட
கிராமப் பெண்ணின்
தளிர் நடைமுன் 'தேர்ந்தெடுத்த
அழகி' எங்கோ!

—திருக்கோணமலைக் கவிராயர்—

முள்ள சாதாரண உறவுக்கு வாலும் தலையுமிட்டு உயிர் கொடுத்து அவர் உலவ விட்டிருந்தார். அவரது கண்டனக் கணைகளை ஏற்றுப் புண்ணுன நெஞ்சத்துடன் அவன் வகுப்பறைக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது அவனது வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தவள் போல் சுசீலா வழியிலேயே குறுக்கிட்டாள்.

''பிரின்சிப்பல்' என்ன சொன்ஞர்?''—சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே அவள் கேட்டாள்.

''உமக்கும் எனக்கும் ஏதோ தொடர்பிருப்பதாய் வெளியில் பேசிக் கொள்கிருர்களாம். அதனல் கல்லூரியின் பெயர்கெட்டுப் போகிறதாம்"—அவன் மாணவனின் நிலையில் குறுகி நின்று ஒப்பித்தான்.

''அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்?"—தொடர்ந்து கேள்வி பிறந்தது.

''மற்றவர்கள் சந்தேகிக்குமளவுக்கு எங்களுக்குள் எந்தவித உறவுமில்லையென்று சொன்னேன்."

''ஏன் உண்மையைச்சொல்வது தானே! நாங்கள் எப்படி நடந்தால் அவருக்கென்ன?''—சுசீலா வலிந்து ஒரு கவர்ச்சிப் புன்னகையை இதழ்களில் தவழ விட்டபடி தன் வகுப்பறையை நோக்கி நடந்தாள்.

செல்வம் சில விஞடிகள் நின்று நிதானித்தான். தங்களுக்குள் இயல்பாக நடைபெற்ற பழக்கத்தை உன்னத நிலையில் வைத்துக் கல்லூரி அதிபர் மதிப்பிட்டதும், சுசீலா அதற்கு மறைமுகமாக உருவம் கொடுத்ததும் சில நிமிடங்களுக்குள் நடைபெற்ற நிகழ்ச்சிகளாக அவனல் கருத முடியவில்லை. காலங்காலமாய் ஏங்கி வந்த கனவு மயக்கம் அவன் முன்னேவிரிந்தது.

அந்தரங்கமான மனேதத்துவ விசாரணைகளால் உள்ளர்த்தங்களை எடைபோட்டு மதிப்பிடும் திறமை அவனுக்கில்லை. நேரடி விளக்கங்களைத் துகட்பொழுதில் கிரகிக்க அவனல் முடிந்தது. சுசீலாவின் வார்த்தைகளால் இதயம்துள்ளியது. எவ்வளவு திறமையாக—லளிதமாக தன் விருப்பத்தைத் தெரிவித்து விட்டாள்.

அன்றுதொடங்கிய உறவுதான். காலகதியில் எப்படியெல்லாம் செழித்துக் கிளைபரப்பி வளர்ந்து விட்டது!

சாந்தி தியேட்டருக்குச் செல்வதற்கு நேர்வழி இருக்க மாதா கோவில் குச்சொழுங்கையால் அவர்களது மகிழ்ச்சிப் பவனி தொடர்ந்ததற்கு அவனது தைரியம் மட்டும் காரணமல்ல; சுசீலாவின் அன்பின் நெகிழ்ச்சியில் அவன் ஆழ்ந்து அதிலேயே இறுகப் பிணைந்திருந்தான்.

வாழ்க்கை விருட்சம் இயற்கையான தத்துவப்படி ஆறு மாதங்களைச் சருகுகளாய் உதிர்த்தது. அவர்களது தொடர்பும் இயல்பாகத்தான் வளர்ந்தது.

இசைத்தட்டின் இனிமையான பகுதிகளை ஈவிரக்கமின்றித் தறிகெடச் செய்யும் கீறல்கள் போல் இடையிடையே ரசக்குறைவான சில சம்பவங்களும் இல்லாமல் இல்லை.

சுசீலா ஏன் தான் எதற்கும் இப்படி அவசரக் குடுக்கையாக நடந்து கொள்கிருளோ? எந்த விஷயத்திலும் திடமான ஒரு நீர்

மானத்துடன் அவள் திடீரென்று வந்து நிற்பாள்: அதை எப்படியும் நிறைவேற்றியே தீர வேண்டும் என்பதுபோல் பிடிவாதம் பிடிப்பாள். பல சமயங்களில் அவைகளின் தார தம்மியம் குறித்து ஆலோசிக்கவே செல்வத்திற்கு அவகாசம் இருப்ப தில்லை. அவன் சம்மதத்திற்கறிகுறி யாய் தலையை அசைப்பான்.

இப்படிச் செய்தும் அவளுக்குத் திருப்தி ஏற்படவேண்டுமே! எதை யோ பறிகொடுத்தவள் போல் தலை யைத் தாழ்த்திக்கொண்டே அவள் நடந்து செல்வாள். சுசீலாவின் மனம் புண்படக் கூடாதே என் பதற்காகத் தன் அபிப்பிராயங்களை முடக்கி மறைத்துவிடும் பல சந் தர்ப்பங்களில் அவளின் சுரத்தற்ற நடத்தை செல்வத்திற்கு என்னவோ போல் இருக்கும். இருந்தும் வெளிப் படையாக அதைக் கேட்டுவைக்கும் துணிவு அவனுக்கு ஏற்பட்டால் தானே. ஆட்சேபங்கள் எழுந்த வேகத்தில் திரும்பவும் அடங்கி விடும்.

மூன்று மாதகால விரயத்தில் சுசீலாவின் போக்கில்சிறிது மாறுதல் ஏற்பட்டதை அவனால் அவதானிக்க முடிந்தது. முன்பெல்லாம் வளவளா வென்று அவனுடன் பேசிவந்த அவள் இப்போது தன் பழக்கத்தைப் பெருமளவு குறைக்கத் தொடங்கி னாள் விஞ்ஞான ஆசிரியர் மனோ கரனுடன் பேசுவதில் சந்தர்ப் பத்தில் பெரும்பகுதியைச் செலவிட் டாள். இதன் மூலம் அவள் தன்னை விட்டுச் சிறிது சிறிதாக விலகிப் போவதாக அவனுக்குத் தெரிந்தது.

மனோகரனுக்கு முப்பது வய திருக்கும். ஆஜானுபாகுவான தோற்றம். எவரையும் எடுத் தெறிந்து பேசும் சுபாவம். முதல் பார்வையிலே இத்தகைய இலட் சணங்கள்தான் மனதில் பதியும். மணமானவர்கள், அற்றவர்கள் என்றவித்தியாசமின்றி ஆசிரியைகள் அனைவருடனும் வலிந்து சென்று அவன் இளித்து இளித்துப் பேசும் போது செல்வம் அருவருப்பால் முகத்தைச் சுளித்துக் கொள்வான். சுசீலாவின் விஷயத்தில் மனோகர னுக்குப் பிரத்தியேக அக்கறை உண்டென்பது அனைவருக்கும் தெரியும், ஆனால், அவள் பெருமளவு விலகி நடந்து கொள்ளுவாள்.

இப்போது தானாகவே சென்று அவனது வலையில் விழுவதென்றால்! சுசீலாவைக் கண்டித்து நாலு வார்த் தைகள் திட்டவேண்டுமென்று அவன் நினைத்துக் கொள்வான். மறுகணமே அவனது நினைவில் கவியும் அவளது களங்கமற்ற முகம் இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் தீய்த்து விடும். இருந்தும் மனோகரனுடன் அவள் நெருங்கிச் செல்கிறாள் என் பதில் சந்தேகம் இருந்தாலும் தன் னுடன் முன்போல் ஒட்டுதல் இல்லை என்பதை அவனால் அனுமானிக்க முடிந்தது. நான்கு நாட்களின் முன் சுசீலாவே அவனிடம் கேட்டாள்.

"மனோகரன் படத்திற்கு வரட்டு மாம்; போகட்டுமா?"

அவனது இதயத்தை யாரோ குறட்டினால் அமுக்கித் திருகுவது போல் இருந்தது. கண்களில் நீர் பனிக்க அவன் சுசீலாவை ஏறிட்டு நோக்கினான். அவள் எவ்வித சலன முமற்றுச் சுவரில் தொங்கிய கண் ணனின் படத்தை உற்றுக் கவ

னித்துக் கொண்டிருந்தாள். உணர்ச்சிகளை மென்றுவிழுங்கிக் கொண்டே அவன் சொன்னான்.

"அதற்கென்ன, போய்விட்டு வா!"

அவள் எதுவும் பேசவில்லை. செல்வத்தை ஏறெடுத்தும் பார்க்காமல் விடுவிடென்று நடந்து சென்று மறைந்து விட்டாள்.

இரு நாட்கள் எறும்பாய் ஊர்ந்தன.

இன்று, அவன் நிற்பதையே கவனிக்காதவள் போல் சுசீலா மனோகரனுடன் செல்கிறாள். கைகோர்த்தபடியே நடந்து சென்று மாதாகோவில் சந்நிதியுள் இருவரும் நுழைகின்றனர்.

செல்வத்தால் தொடர்ந்து சிந்திக்க முடியவில்லை. நெஞ்சை அமுக்கியபடியே தன் அறைக்குள் வந்து படுத்தான். இரவெல்லாம் அழுது புரண்டானோ? அமைதியுடன் தூங்கினானோ?

ஒருவாறு பொழுது விடிந்து விட்டது. தபால்காரனின் மணியோசை கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான். கண்களைக் கசக்கிக் கொண்டே சென்று கடிதத்தை வாங்கும் போது முத்துமுத்தான எழுத்திலிடப்பட்ட முகவரி கண்களை உறுத்தியது. அவன் கடிதத்தைப் பிரித்த அவசரம் குண்டுவீசும் விமானிகளுக்குத்தான் இருக்குமோ என்னவோ? சுசீலா தான் எழுதியிருந்தாள்,

அன்புள்ள செல்வத்திற்கு,

இப்படியொரு கடிதத்தை நீங்கள் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். எனது தற்போதைய மாற்றத்தை நான்கூடத்தான் எதிர்பார்க்கவில்லை.

உங்கள் நினைவுகளை என் இதயத்திலிருந்து சிறிது சிறிதாகப் பிய்த்தெறிந்து விட்டு இப்போது என்னை முழுதாக மனோகரனிடம் ஒப்படைக்கத் துணிந்துவிட்டேன், இது அதிகப் பிரசங்கித்தனமாகவும், நடைமுறைப் பண்பாட்டிற்கு விரோதமாக விரசமான முறையில் நான் நடமாடுவதாகவும் உங்களுக்குத் தெரியும். என் ஆத்மார்த்த பரிசோதனைகளை அறிந்தபின்னும் தொடர்ந்து இப்படியான மனோபாவத்துடனிருக்க உங்களால் முடிந்தால் அதற்காக நான் அனுதாபப்படுகிறேன்.

எங்களுக்குள் தொடர்பேற்பட்ட காலத்தை எண்ணிப்பாருங்கள். அன்றிலிருந்து இன்றுவரை நானே உங்களை இயக்கிவந்திருக்கிறேன். உங்களுக்கென்று திடமான எண்ணமுமில்லை, அதை நிறைவேற்றும் திண்மையுமில்லை. என் எண்ணத்திற்கெல்லாம் நீங்கள் இழுபட்டீர்கள். ஒருவிதத்தில் நீங்கள் பெண்ணாகவும், நான் ஆணாகவும் நடமாடினோம். இதை எழுத எனக்கே வெட்கமாயிருக்கிறது.

என் விருப்பங்களுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் அதே சந்தர்ப்பத்தில் உங்கள் ஆசைகள் எதையாவது என் மேல் சுமத்த நீங்கள் முயன்றீர்களா? ஒரு மனைவி என்ற ரீதியில் உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் தயாராயிருந்தேன். உங்களால் உரிமைபாராட்டப்படும் அந்த நிலைக்காக என் இதயம் ஏங்கியது. மாணவர்களிடம் காட்டும் கண்டிப்பையாவது என் விஷயத்தில் உங்களால் கடைப்பிடிக்க முடிந்ததா?

ஆணின் உறுதியுடன் தனித்து நிற்க உங்களால் முடியாது. நீங்கள் பெண்ணாகப் பிறந்திருக்கவேண்டியவர். மேனியழகில் மயங்கி உங்கள் மனதைப் புதியபாதையில் செலுத்தி விட்டேன் என்பதையிட்டு உள்ளூர வருத்தப்படுகிறேன்.

ஆரம்பத்தில் மனோகரனுடன் பழகத்தொடங்கியபோது உங்கள் குறுக்கீட்டை நான் எதிர்பார்த்தேன். அவ்விஷயத்தில் நீங்கள் ஆட்சேபிப்பீர்கள் என்று நினைத்தேன். ஆனால், உங்களிடம் ஆண்மை இருக்கவில்லை. அவருடன் நான் ஒட்டியுறவாடுவதைப் பார்த்துக் கொண்டும் நீங்கள் வாளாவிருந்தீர்கள்.

அந்த நிலையில் தான் ஒரு சபலம் என்னைப் பற்றிக்கொண்டது. என்னைத்த தன்மையில் நடமாடும் உங்களை விட மனோகரன் எவ்வளவோ மேல் என்று தெரிந்தது. பெண்ணென்ற நிலையில் என்னைப் பேணுவதற்கும், ஆணென்ற உரிமையில் என்னை ஆளுவதற்கும் அவருக்குத் தெரிந்திருந்தது. உங்கள் அலட்சியம் என்னை அவரிடம் ஒப்புவித்தது.

மொத்தத்தில் நான் பெண்ணாக வாழ விரும்பினேன். என் எண்ணம்......"

கடிதம் தொடர்ந்து சென்றது. செல்வத்தால் அதை வரிக்குவரி கிரகிக்க முடியவில்லை. கண்கள் இருண்ட நிலையில கடிதத்தை மார்போடு அணைத்தவண்ணம் மேசையில் சாய்ந்தான்.

## திருக்குறள் கீர்த்தனை - 24

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

இராகம்: வசந்த — தாளம்: ஆதி

**பல்லவி**

திண்மையாம் தோட்டியால் திரியும் ஐம்பொறிப் புலன்
உண்மையாய்க் காத்திடுவாய்—மனமே

**அனுபல்லவி**


மண்ணுலகினில் உன்னை மாயமாக்கிடும் மெய்வாய்
கண்மூக்கு செவி ஐந்தும் பண்ணிடும் ஆசைநீக்கி

**சரணம்**

பேரின்பமாம் அந்தப் பெரும் நிலமதன் கண்ணே
நீயின்பமாய் வாழ நிலைத்திடும் வித்தாக
பாரின்கண் அடக்கிடும் பொறிப்பயன் அமைந்திடும்
நீயிந்த நெறிதலால் நெஞ்சினில் உரங்கொண்டு

யாழ்ப்பாணம் ந. வீரமணி

# அழகுத் தெய்வம்



-மு கனகராசன்-

அன்று புரட்டாதி பதினோராம் நாள். ஒரு விழாவிற்குச் சென்று வந்து படுக்கையை நாடினேன். மனத்தில் நினைவுகள் குவிந்துகிடக்கின்றன!

மனத்தில் தெளிவு இருந்தால் உடலுக்குத்தான் எத்தனை தெப்பு. எவ்வளவு சுகம்! கலைகளின் பரிச்சயம் தருகின்ற ஹிருதய நிறைவு இருக்கின்றதே; அப்பப்பா! அதன் தன்மையும், மென்மையுந்தான் எப்படித் தண்ணென்றிருக்கிறது? காற்றிலேறி விண்ணையுஞ் சாடும் துணிவு வரத்தான் வருகிறது

என் நெஞ்சத்தில்தான் எத்தனை கலைமடந்தையர்—காவிய நாயகியர் இலக்கியப் பெண்டிர்—கற்பனை மங்கையர்—வந்து வந்து தோற்றுகின்றனர்?

அஃதென்ன! ஓர் அற்புதக் காட்சி! எழில்தான்!

இப்படியான அற்புத நிலவின் சுகானந்தத்தை எங்கே அனுபவிக்லாம்! மூடுபனியிலானதா அந்நிலவு!

இதென்ன இங்கே! எங்கிருந்து வருகிறது இந்தப் பொங்கிவரும் பெருநிலவு!

"ஹா! பெண்ணா இவள்! இவளின் முகத்தினொளி தானா இது! எண்ணிரண்டே வயதுதான். இந்தப் புன்னகையில் விரவிய இந்தத் தோற்றம்... உருவே ஒளியா! அதனாற்றான் இத்தனை காந்தியா?

அழகின் இலக்கணமே வருக! வருக, வருக!

இதோ என் நித்திரையைத் தான் கலைக்கிறாள், எழுப்புகிறாள் என்னை. ஆனால் காட்சியைக் குலைக்கவில்லை.

'அப்படி என்ன தூக்கம்? என்னைப் பார்க்க விரும்பாமலும் ஒரு நித்திரையா? எழு! என்னைப் பார்?' என்கிறாள்.

கண்களைத் திறக்கிறேன் எதிரே:-

ஹா! அடடா!

என் முன்னே...!

என் காட்சியில்...!

அது...அது—

அழகு! அழகு! எழில்! இளமை!

என் சுண்கள் மலர்கின்றன!

என் இதயம் மலர்கின்றது!

நானே மலர்கின்றேன்!

என்னில் ஒளியேந்தும் அவா! ஒளியாகும் வேட்கை! மலரும் துடிப்பு! என்னிரு இதழ்களும் விரிகின்றன. கேள்விச் சரங்களைத் தொடுக்கின்றன.

"தேவி! யோகந்தான் சிறந்ததென்பதா? அல்லது தவம்தான் பெரிதா?"

—"யோகம்தானே தவம்; தவம் தான் யோகம்!"

"அனைத்தும் ஏகந்தானா? பொருளின்றி இரண்டாகுமோ?"

—"இரண்டுமாம், ஒன்றுமாம் யாவுமாம்."

"தாகத்தின் துன்பத்தை யுணர்ந்து சுரக்கும் அருட்டண்மை வான் மழைக்கிருக்க முடியுமா?"

—"நிஷ்களங்கமான பரிசுத்த அன்பை நிறைவோடு தருவது வேறென்னவாக இருக்க முடியும்...?"

ம்!...நான் இமைகளைச் சிமிட்டிக் கொள்கிறேன்.

"காலத்தின் விதியால் மதியைக் கடந்திடலாகுமா?"

—"மதியின் கருவியே காலந்தானே!"

க்ஷண நேரம் கண்களை மூடுகின்றேன். சிறிதே மௌனத்தின் பின் மீண்டும் கேட்கலானேன்:—

"இப்பிரபஞ்சத்தில் நாம் விரும்புவதெல்லாமே கிடைத்துவிடுமா?"

பதில் உடனே கிடைக்கவில்லை.

ஆயின் அந்தப் பார்வையில் புஷ்பத்தின் பரிசுத்தமிருக்கிறது. என்னிதயத்திலும் ஒரு பூ விழுகிறது.

—"விரும்புவதில் ஒன்றிரண்டு பலித்துவிடலாம்..."

"நினைவை — நெஞ்சத்தை ஏலத்தில் விடலாகுமா?"

—"நினைத்தால் நல்ல நினைவுகளின் பலன் கிடைக்கத்தான் கிடைக்கும்."

'தேவி! கடைசியாக ஒன்று தேவீ!.. மூலத்தையே சொல்லிவிடட்டுமா?... இல்லை...விடட்டுமா...?"

இக்கேள்விக்கு விடைதர அந்த இதழ்கள் திறக்கவில்லை.

என்பார்வையையுயர்த்தி அந்த அழகுமுகத்தை நோக்குகிறேன்.

அங்கே:-

அருள் சுரங்கட்டியிருக்கிறது.

அந்த முகத்தைக் காணவில்லை.

நான் மோகத்தைக் கொன்றுவிட்டேன்.

என்னிதயத்தில் மலர்கள் குவிந்துகிடக்கின்றன.

அவற்றிடையே, அதோ தெரிகின்றதே!

அதுதான் அழகுத்தெய்வத்தின் ஒளிமுகம்!

செலவைக் குறையுங்கள்! சலவை செய்ய

**இரண்டு சதம்!**




- 20 சதத்திற்குப் பெரிய மில்க்வைற் நீலக் கட்டி வாங்கினால் 10 உடுப்புகள் சலவைசெய்யலாம
- கடைகளில் மில்க்வைற் வேண்டும் என்று கேளுங்கள்; மில்க்வைற் தானா என்று பார்த்து வாங்குங்கள்.

சிக்கனத்திற்கும் சிறந்த சலவைக்கும் உகந்தது.

**மில்க் வைற் நீல சோப்**

# பிச்சைக்காரன்

வ. இராஜேந்திரன்

"ஏழைக்கு ஏது இன்பம்..."

நெஞ்சுவேக, இதயம் உருக, இரத்தம் கொதிக்க, அந்தப்படத்தில் ஏழையாக நடித்தவன் பாடியபாடல் 'ஈஸ்வரன்' தியேட்டர் முன்னால் திரண்டிருந்த ரஸிகர்களின் சீட்டியொலி, கூக்குரல், கொச்சைப் பதங்களோடு கலந்து ஆபாசப்பட்டுக் கொண்டிருந்தது.

—"ஐயா! தருமதுரைகளே! ஏழைக்கிரங்கவேணும், ஏழை முகம் பார்க்கவேணும்"—சந்தடி, கூக்குரல் குழப்பம் எல்லாவற்றோடும் கலந்து ஒரு பிச்சைக்காரனின் குரலும் ஒலித்தது. கீறல் விழுந்த இசைத் தட்டைப் போல் வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப இசைத்துக் கொண்டிருந்தான்.

சிறந்த கதை, டைரக்ஷன், நடிப்புகளால் மக்களின் பாராட்டுதலைப் பெற்றபடம்; சிறந்த நடிப்பினாலும், தன் நல்ல செய்கைகளாலும், மக்களின் நெஞ்சை ஆக்கிரமித்துக் கொண்ட நடிகர் ஒருவர் பாகமேற்றுள்ளபடம். கூட்டத்துக்குக் குறைவு இருக்குமா?

அந்தப் படத்தில் வரும் கட்டங்களைச் சித்தரிக்கும் பெரிய 'போஸ்டர்'களின் கீழ் 'ஏழையின் கண்ணீர்' என்னும் எழுத்துக்கள் சிறப்பாக அச்சிடப்பட்டிருந்தன.

"நூற்றுக்கு ஒன்று! இந்தப் படத்தை ஆருவது தடவையாகப் பார்க்கப் போறேன்!"

"அவன் பிச்சைக்கார வேஷமும் நடிப்பும், கல்மனசையும் கலங்க வைக்கும், அந்த ஏழைபடும் துன்பமும்...போய்யா! அதை வார்த்தையாலே சொல்ல முடியாது!"

அங்கு நின்ற பிச்சைக்காரனின் யாசிப்புக் குரலோடு, இந்தப் பேச்சு எல்லாம் கலந்து கொண்டிருந்தது.

நாணயத்தோடும், நேர்மையோடும், வாழவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிற சமுதாயத்திலேயே பொய்யும், புரளியும் நிறைந்தஇந்தக் காலத்தில், பசி ஒன்றையே தம் உடைமையாகக் கொண்டு, வறுமையின் பிடியிலே சிக்குண்டு அல்லல்படும் பிச்சைக்கார சமூகத்தில் நிலவும் குறைகளைப் பெரும் குற்றமாகக் கொள்ள முடியாது என்பதை இந்தப் படம் பிரதானமாகக் காட்டுகிறது.

ஒட்டிய வயிறும், குழிவிழுந்த கண்களுமாகத் தோன்றிய அந்த ஏழையின் வாழ்விலே எத்தனை துன்பங்கள்; இடர்ப்பாடுகள்; விரசம்! மனிதராசியின் உள்ளத்தைக் கலக்கி உணர்ச்சியைப் பொங்கச் செய்து புது விழிப்பும் புது நோக்கும் தரக்கூடியது 'ஏழையின் கண்ணீர்'—பத்தி பத்தியாக விமர்சனக்காரர்களின் எழுத்துக்கள் பத்திரிகைகளின் பக்கங்களை அடைத்துக் கொண்டிருந்தன.

க்யூவில் முந்திச் சென்று டிக்கட் பெறுவதற்குச் சனங்கள் நெருக்கியடித்துக் கொண்டிருந்தனர்.

கௌண்டரில் ஏற்பட்ட சிறு

குழப்பத்தால் க்யூவரிசை குலேந்து கலகம் ஏற்பட்டது. அங்கு அமைதி யேற்படுத்தப் பொலீசார் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். மேலும் மேலும் சனங்கள் வந்து க்யூவிலே குழப்பம் உண்டுபண்ணுதிருப்பதற்காக மனேஜரின் உத்தரவால் கேட் சாத்தப்பட்டது' கேட்டுக்கு வெளியே பிரளய காலமேபோல் அமர்க்களமும் சந்தடியும் காதைப் புளிக்க வைத்தது.

டிக்கெட் வாங்கப் பெரும் அவதியோடு வெளியே நின்றுகொண்டிருந்த எழுபது எண்பது பேர் எப்போது 'கேட்' திறக்கும் உள்ளே நுளேவோம் எனக் காத்துக் கொண்டிருந்தனர்.

சாத்தப்பட்ட கேட்டில் முதுகைச் சாய்த்துத் தனது ஒரே காலுக்குத் துணையாய் இரு கவைக் கோல்கள் உடல் பாரத்தைத் தாங்கி நிற்க வலது கையில் தகரடப்பாவைப் பிடித்துச் சனங்களின் முன்ஞல் நீட்டி யாசித்துக் கொண்டிருந்தான் அந்த நொண்டிப் பிச்சைக்காரன்.

''ஐயா, தரும துரைகளே! ஏழைக்கிரங்கவேணும், ஏழை முகம் பார்க்கவேணும்" என்ற அக்குரலின் நடுக்கமும், பரிதாபமும் அவர்கள் இதயத்தில் பட்டதா...? சினிமாவில் உயிரற்ற சித்திரத்தில் ஏழைபடும் துன்பங்களேக் கண்டு, அனுதாபத்தோடு ரஸிப்பதற்குக் கூட்டத்தில் நெரிப்புண்டு கொண்டிருந்தார்கள். ''நான் சாப்பிட்டுநாலுநாள் ஆகுது, கண் பஞ்சடைச்சுப் போய்ச்சு. நிற்க முடியல்லே"—யாராவது தன்னே ஆதரித்துச் சில நாணயங்களேத் தகரக் குவளேயில் போடமாட்டார்களா என எதிர்பார்த்து, சக்தியை ஒன்றுதிரட்டிக் கத்திக்கொண்டிருந்தான் அவன்.

அவன்தோற்றத்தைக் கொண்டு வயதைக் கணிக்க முடியாது; நாற்பதும் இருக்கலாம். ஐம்பதும் இருக்கலாம். பம்மென்று அழுக்கேறிக் கலேந்து கிடக்கும் தலேமயிர். கன்னத்தில் தாடியென்ற பெயருக்கு தூரத்தில் ஒன்ருக முளேத்திருந்த மயிர். அவனது ஒரே காலுக்குத் துணையாய், இரு அக்குள்களிலும் பொருந்தி நிலத்தில் ஊன்றி நிற்கும் ஊன்றுகோல்கள். முழங்காலளவில் துண்டிக்கப்பட்ட இடது கால் இடுப்பிலிருந்து தொங்கியது.

அந்தப் படத்தில் வேஷம் தரித்துப் பிச்சைக்காரனுகத் தோன்றியவனிலும், இவனது தோற்றம் பார்ப்பதற்குப் பரிதாபமாகத்தான் இருந்தது.

''சாமி! ஏழைமுகம் பார்க்க வேணும்...... ஏழைக்கிரங்க வேணும்..." கீறல் விழுந்த இசைத்தட்டைப் போல் திரும்பத் திரும்ப இதையே கூறிக் கொண்டிருந்தான்.

சுதந்திர ஈழநாட்டிலே சகல உரிமைகளும் பெற்றுத் தனக்குத் தானே மன்னஞக விளங்குபவன் தான் அவனும். அவன் பேர் அவனுக்கே தெரியாது. தாயின் குரலே அவன் கேட்டதே கிடையாது. அவன் தகப்பனேப்பற்றியோ அவனுக்குத் தெரியவே தெரியாது.

மூன்று நாட்களாக அவனுக்குச் சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லே. உலர்ந்த எலும்போடு பிரியாதபடி

யிருந்த அந்த ஒட்டியவயிற்றிற்குள்ளிருந்து பசி அவன் பிராணனை வதைக்க, தணலாய் தகிக்கும் வெயிலில் உருகும் தார் ரோட்டிலிலும், வறுத்துக் கொட்டிய புழுதி மண்ணிலும் ஒரே பாதம் அழுந்தி அழுந்திப் புதைய அன்று முழுதும் பல படிகளில் ஏறி இறங்கியும் ஒரு நாணயம் கூட அவனது தகரடின்னில் விழவில்லை.

'ஈஸ்வரன்' தியேட்டர் ஒன்றுதான் பாக்கி. அதையடையப் பெரிய தெருவில் இரண்டு மைல் தூரம் நடக்கவேண்டும்.

டக்...டக்...டக்...

ஈஸ்வரன் தியேட்டரை நோக்கித் தன் யாத்திரையைத் தொடங்கினான், தன் வாழ்வில் அவன் கண்ட ஒரே ஜீவிய யாத்திரை!

இடையிடையே சில நிமிஷம் தெரு ஓரத்திலிருந்து இளைப்பாறினான். துன்பத்தால் விம்மிக் கலங்கிப் பழுவுற்ற அவன் உள்ளத்தில் வயிறு வாட்டத்தால் உணர்ச்சிகள் வெடித்துச் சிதறிக் குழம்பின.

டக்...டக்...டக்...

இரைக்க இரைக்கச் சிரமத்தோடு ஊன்றுகோல்களைத் தூக்கி வைத்து நடந்தான். பாடகன் பாடும் போது போடும் தாளம் போல் ஓசை தவறாது ஊன்றுகோல்கள் சத்தம் செய்ய நடந்து விளக்கேற்றும் நேரத்தில் ஈஸ்வரன் தியேட்டரை அடைந்தான்.

"தரும துரைகளே! வயிறு கொதிக்குது; காது அடைக்குது; இந்த ஏழையைக் கண் திறந்து பார்க்கவேணும்," கேட்டில் சாய்ந்து நின்று நடுங்கும் குரலில் கூக்குரலிட்டான்.

தியேட்டருக்கு வெளியே, டிக்கெட் கிடைக்காத தவிப்புடன் நின்றவர்களின் சந்தடியில் அவன் குரல் கேட்கவில்லை.

"ஏய், கேட்கீப்பர்! என்னப்பா நீ! இரண்டு மணி நேரமாகக் காத்துக் கிடக்கிறோம். நீ 'கேட்'டை அடைச்சுப் போட்டு நிற்கிறாய். கேட்'டைத் திறந்து விடய்யா!" எவனோ ஒருபொறுப்பற்றவன் கூச்சலிட்டான்.

---

# நியதி

**-சாந்தன்-**

ஒன்றையெண்ணி உயிர்த்திருந்தால்
இன்னொன்றாக உருவெடுக்கும்
இன்றே கிடைக்கும் என்றிருந்தால்
என்றுங் கையிற் கிடைக்காது
நன்மை செய்ய நாமெண்ணி
நன்றே பலவும் முயன்றாலும்
துன்பஞ்சூழ்ந்து எமை வாட்டிச்
சோர்வு கொள்ள வைத்துவிடும்

∴ ∴ ∴

கன்னற் சுவையை எதிர்பார்த்துக்
கனியைப் பிளக்கக் கைவைத்தால்
சின்ன வண்டு பறந்துவரும்
சித்தம் சிறிதே அருவருக்க
எண்ணம் விளைவும் முரணாக
எதிர்பாராமல் நடப்பதுமேன்?
இன்னம் இப்படி எத்தனையோ,
இதுவோ இயற்கை நியதியடா?

"இந்த ஏழையைக் காப்பாற்றுங்கோ! புண்ணிய முண்டாகும்!" பிச்சைக்காரனின் பாட்டுத் தொடர்ந்துகேட்டுக்கொண்டேயிருந்தது.

கௌண்டரில் குழப்பம் அடங்கி அமைதியேற்பட்டதினுல் க்யூவரிசை ஒழுங்காகியது. வெளியே நின்ற சனங்களை உள்ளே விடுவதற்குக் 'கேட் கீப்பர்' பூட்டைத் திறந்து, கேட்டை முக்கால் பகுதி திறப்பதற்குள்—

டிக்கெட் பெறுவதற்கு வெளியே நின்று கொண்டிருந்த ஐம்பது, அறுபது பேர் முக்கால்வாசி திறந்த கேட்டை நன்ருக உந்தித் திறந்தார்கள். கேட்டில் சாய்ந்து நின்ற பிச்சைக்காரன் அவர்களால் தள்ளப்பட்டு, மல்லாந்து விழுந்தான். ஒரு சில விநாடிகளில் பல சோடிகால்கள் அவன் கீழே கிடப்பதையும்கவனிக்க நேரமற்று அவன் தலையிலும், மார்பிலும், வயிற்றிலும் மிதித்துக் கொண்டு உள்ளே ஓடின. 'ஏழையின் கண்ணீர்' படம் படம்பார்ப்பதற்கு ஏழையைக் காலடியில் மிதித்துச் சென்ருர்கள். சிலுவையாக விரிந்து கிடந்த கைகள்; கடைவாயிலிருந்து வழிந்து கொண்டிருந்த இரத்த நூல்; இரத்தம் வழியும் வாயிலிருந்து வேதனையோடு வந்த முனகல்; திறமையற்ற நடிகன் சாவின் தலைவாசலில் காட்டும் முகபாவனை போல் உதடுகள் கோணிக் கோணி வலித்தன. மூக்குத்தண்டின் இருபுறத்திலும் மடிப்பாகக் கிடந்த சுருக்கங்கள் சுருங்கி விரிந்தன. நெஞ்சில் பெருகி வந்த வேதனையை அழுத்தி ஜீரணிக்கச்செய்வது போல் துருத்திக் கொண்டிருந்த கண்டச் சங்கம் இருமுறை ஏறி இறங்கின.

தன் காலம் முழுவதும் பாடி வந்த சங்கீதத்தைக் கடைசி முறையாக அவன் உதடுகள் அஞ்சல் செய்தது "ஏழைக்கிரங்கவேணும்... ஏழை முகம் பார்க்க வேணும்..." மெல்ல மெல்ல அவனது வாய் திறந்தது. பாதி திறந்த விழிகள் செருகியபோது இலேசான வெண்மை மட்டும் கீறலாகத் தெரிந்தது.

அவன் உயிரின் துடிப்பு அடங்கி விட்டது. அவன் வாழ்வு முழுதும் துணையாக இருந்து வந்த ஊன்றுகோல்கள், சாவிலும் துணையாக இரு புறமும் கிடந்தன. சனங்களின் காலடியில் நசுக்குண்டு நெளிந்த தகரடின் அவன் காலடியில் கிடந்தது.

எங்கோ தூரத்தில் கேட்கும் எதிரொலி போல் தியேட்டருக்குள்ளிருந்து அந்தப் பாடல் இலேசாகக் கேட்டது.

"ஏழைக்கு ஏது இன்பம்..."

**கலைச்செல்வி**
விற்பனையாளர்
நா. ஆசைமுத்து
தேனீர்க்கடை
வழக்கம்பரை, : சுழிபுரம்.

# நம்நாட்டு வாசகர்

''இது சிறுகதையுலகம். வாழ்க்கைகூட அப்படித்தான் ஆகிவிட்டது. எனவேதான் சஞ்சிகைகள் என்ருல் நல்ல சிறுகதைகளிருக்கின்றனவா என்று பார்க்கிருேம,'' என்று ''மே மாதக் கலைச்செல்வி''யில், சகோதரி ஞான. சிவக்கொழுந்து எழுதியிருந்தார்.

இது முற்றிலும் உண்மை. நான் நல்ல சிறுகதைகளுடன் நல்ல கவிதையையும் எதிர்பார்க்கிறேன்.

நான் சிறுவயது முதல் விரும்பிப் படிப்பது ''கல்கி'' ஒன்றே! னர்தான் குமுதம், ஆனந்த விகடன் என்பன. ஆனல் இப்பொழுது கல்கிக்குப்பின்னர் இரண்டாவதாகக் 'கலைச்செல்வி''யே என் இதயத்தைக் கவர்ந்துவிட்டது!

''இந்த உலகத்தில் ஏழைகள் இருக்கும்வரை பாயாசம் குடிப்பதில்லை'' என்று நம் எல்லோர்க்கும் சவுக்கடிதந்தும், ''ஒரு பெண் எதற்காகவும் வாய்விட்டுஅழலாம், ஆனல் ஆண்பிள்ளை பல சமயங்களில் அப்படி அழமுடியாது; இதயத்தினல் மட்டுமே அழமுடியும்'' என்ற தீர்மானங்களையும் தத்துவங்களையும், ''பொன்விலங்கு'' என்ற கதையின் சிருஷ்டியினல் கல்கி வாயிலாக நமக்குத் தந்தார் ''மணிவண்ணன்'' என்ற பார்த்தசாரதி!

அதன்பின் நான் பாயசங்குடிப்பதுமில்லை, வெளியாக அழுவதுமில்லை, நல்ல கவிதைகளையும், தத்துவங்களடங்கிய மணிபல்லவம், சொர்க்கத்து நிழல் புதுவெள்ளம் என்பவைகளைப்படைத்ததும் ஜீவகீதம் காலச்சக்கரம் என்பவற்றைப் படைப்பதும் கல்கியாகும். அரசியல், விஞ்ஞானம் கார்ட்டூன் என்பவற்றையும் படைப்பதிலும் கல்கியே சிறந்தது.

சிறந்த நல்ல கவிதைகளையும்' நல்ல கருத்துக்கள் நிறைந்த சிறுகதைகளையும் நமக்கு அளிப்பதோடு, வளரும் கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் வளர்ப்பதும், வளர்ந்த கவிஞரை, எழுத்தாளர்களை வள்ர்த்த பெருமையும் கலைச்செல்வியையே சாரும். இதனல்தான் நான் இவைகளை விரும்பிப்படிக்கிறேன.

**நாக. குமரன்**
உதய சூரியன் வாசிகசாலையடி
உடுவில்

அன்பர் பெரி. சண்முகநாதன் "கலைச்செல்வி" வாசகர்களுக்கு நன்கு பழக்கமானவர். "அன்புள்ள அம்மாவுக்கு" என்ற இக்கவிதை சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றது. பட்டணத்திற் பயிலுமொருவன் தனது கிராமத் தாயாருக்கு எழுதிய கடிதமே கவிதையாக உருவெடுத்திருக்கிறது.

# அன்புள்ள அம்மாவுக்கு...!

பெரி. சண்முகநாதன்

அன்புள்ள அம்மா உன் அஞ்சல் வரப்பெற்றேன்
என்பெற்ற தாயே எனக்கரிய தெய்வம் நீ
பொன்னுன கையெடுத்துப் போற்றும் தமிழெடுத்தே
அன்பாய் எழுதியவை அத்தனையும் கோடிபெறும்.

"பாலுண்ட வாயில் பசுந்தமிழே கொஞ்சிடுக
நூலுண்ட நெஞ்சத்து நுண்ணறிவே தங்கிடுக
உன்னுடைய தாய்மொழியும் உன்னுடைய தாய்நாடும்
பின்னடைந்து போனுல் பிறகென்ன பீடுண்டாம்"

என்றதிரு வாசகங்கள் என்செவிக்குத் தேனுக
இன்னும் இனிப்பதனை என்னென்று நானுரைப்பேன்
ஊட்டிய பாலோ டுணர்வூட்டிக் காத்தவளே
நாட்டிற்கே வாழ்வுதர வாழ்ந்திருப்பேன் நானம்மா.

'முத்துவிளை கடலும் முப்பழத்துப் பூம்பொழிலும்
அத்தன் அருள்வளரும் ஆயகலைக் கோயிலதும்
மொத்தி முழங்கும் திரைகடல் போய்முத்தமிடும்
இத்தரணி யாளும் இளவரசர் வாழ்மனையும்'

கல்லூரி! என்ற கருத்துரையைப் போற்றுகிறேன்
எல்லோரும் நல்லவரே என்னுடைய நண்பர்கள்
கற்பதற்கே வந்தவர்கள் கல்லூரி மாணவர்கள்,
சிற்சிலநாள் ஆனவுடன் சீர்கெட்டுப் போகின்ருர்.

நாளைக்கே இப்பெரிய நாடாளப் போகின்ற
காளையர் செய்குறும்போ காணப் பொறுக்கவிலை
கொஞ்சம் அறிந்துவிட்டால் கோடி அறிந்தவர்போல்
நெஞ்சத்தில் எண்ணி நெடுஞ்செருக்குக் கொள்கின்றார்

இன்பத்தமிழ்த் தாயர் ஈன்றெடுத்த செல்வங்கள்
அன்புத் தமிழ் மொழியை அப்பாலே ஒதுக்குகின்றார்
தன்மொழியில் பேசுவதைத் தாழ்வென்றே எண்ணுகிறார்.
பொன்னிருக்க ஏனோ புழுதியைப்போய் வாருகின்றார்.

ஆடைக்குத் தானிங்கே அதிக மதிப்புண்டு
பீடைக்குப் பின்னோர் பெரு நரகம் வேண்டுவதோ
ஏதேனும் சொன்னால் எனக்கே செருக்கென்பர்
காதம் போய் நிற்கின்றேன் கண்பொத்திச்செல்கின்றேன்

பட்டினமாம் பட்டினமாம் பாழ்பட்ட பட்டினமாம்
பட்டிணியால் சாவார் படைகிடக்கும் பட்டினமாம்
எந்தப் பெருங்கடவுள் சாபங் கொடுத்தானோ
தந்த வரமெலாம் தான் பிடுங்கிச் சென்றானோ

ஆடிவிடியாமல் அம்மா அலைந்து பல
தேடி விடியாமல் தெய்வமே தேடி வைத்த
கோடி விடியாமல் என்னடாகொள்கையெனக்
கூடிக் கெடுக்கின்ற கூற்றுவரை வைதானோ

நல்லாரைக் காணேன் நயவுரைகள் கேட்டறியேன்
இல்லானைக் காணுங்கால் இல்லாளும் எள்ளுகிறாள்
நானெவரைக் கண்டாலும் நட்பாட அஞ்சுகிறேன்
ஆனவரை ஆய்ந்தறிந்த பின்னுறவு கொள்ளுகிறேன்.

ஆடைக் கடங்காமல் அங்கம் வெளித் தெரியச்
சாடையிலே கொல்வோரைச் சாலையிலே காண்கின்றேன்
கல்லூரி மாணவர்கள் கைதட்டி ஆர்பரித்துப்
பொல்லாத செய்யும் புன்மையினைக் காண்கின்றேன்

ஓடாய் உடம் பிளந்தே ஓர் நாள் உணவிற்குப்
பாடாய்ப் படுகின்ற பலபேரைக் காண்கின்றேன்
மாடாய் ஒருவன் அவனும மனிதன் தான்
பாடாய் இழுக்கின்ற வண்டியிலே அங்கொருத்தி

ஒய்யாரமாய் ஒருவன் உடனிருக்க
வெய்யதே கண்டேன் உலாவந்த வேடிக்கை
காசில்லை யானுல் கடன்வாங்கி ஓடிப்போய்
பேசும்படம் பார்க்கப் பேராவல் கொள்வாரும்

வீடில்லை என்பாரும் வீடுதொறும் சென்றேந்த
ஓடில்லை என்பாரும் ஒவ்வொன்ருய்க் காசெண்ணிக்
கோடிதனக் கின்னும் குறைகிறதே என்பாரும்
வாடிக்கை வட்டி வரவில்லையே என்பாரும்

ஆடுகின்ற நாடகங்கள் அவ்வளவும் காணுகின்றேன்
ஏடுண்டோ எல்லாம் எழுதி முடிப்பதற்கே
என்றவிதம் கண்டேனே என்னம்மா என்னுயிரைக்
கொன்ற விதம் உற்றேன் கொடுந்துயரம் சொல்வேனே?

ஓர்நாள் எனக்குவரும் உய்யுமா றுலகத்தைச்
சீர்ப்படுத்த நானுழைப்பேன் நானுரைக்குஞ் சூழிதுதான்
'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமே'
நீ பெற்ற பிள்ளை நினைக்கும் நினைவிதுவே

தேர்வு நெருங்குவதால் தேடிப் படிப்பதற்கு
ஆர்வம் பெருகுவதால் அஞ்சல் முடிக்கின்றேன்
ஆரமுதச் செந்தமிழால் அம்மா நீ தரவேண்டும்
வாரமொரு முறையுன் வாக்கு


## கலைச்செல்வியின் ஆண்டுச்சந்தா மூன்று ரூபா.

அனுப்பவேண்டிய முகவரி:

**கலைச்செல்வி**

புகையிரதநிலைய வீதி, சுன்னுகம்.

# பாசம்

கலிங்கன்

ஏங்கோ ஒருகடைக்குள்ளிருந்து' சுவர்க்கடிகாரம் பதினொரு முறை அடித்து ஓய்கிறது. சிறிய நகரம். சந்தடிகளெல்லாம் எப்போதோ அடங்கி இரவின் அந்தகாரமோனத்தில் சலனமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றது.

நகரின் மத்தியில் இரண்டு தெருக்கள் ஒன்றுடனொன்று இணைந்து கொள்ளும் ஒரு சந்தி. அந்தச்சந்தியிலுள்ளகம்பத்தில் மின் விளக்கொன்று மங்கலான வெளிச்சத்தைத் தந்து கொண்டிருக்கின்றது. விளக்கைச் சுற்றி ஓராயிரம் வண்டுகள் நர்த்தனமிடுகின்றன.

சந்திக்கு நேரெதிரே இரண்டு பெரிய கட்டிடங்கள். இரண்டு கட்டிடங்கட்கும் இடையே இரு அடி அகலத்தில் ஒரு சந்து. அந்தச் சந்திற்கு ஒரு கட்டிடத்தின் சாய்ந்த கூரை முகடிடுகின்றது. மின் விளக்கின் மங்கல ஒளி அந்த சந்திற்குள்ளும் சிறிது எட்டிப் பார்க்கின்றது. அந்த ஒளியில்–

சந்திற்குள் ஓர் உருவம் கூனிக் குறுகிக் கொண்டு கிடப்பது தெரிகின்றது. கையில் ஒரு சங்கிலி துவண்டு கிடக்கின்றது. படுக்கும் போது போர்த்த பழைய சாக்கு உடலை விட்டு நழுவிக் காலடியிற் கிடக்க வெளியில் விசிறியடிக்கும் சில்லென்ற குளிர் காற்றையும் பொருட்படுத்தாது; தன்னை மறந்து இந்த உலகத்தை மறந்து; வேறு ஏதோ மறக்கமுடியாத நினைவில் மனதைப் படியவிட்டு; கண்ணை மூடிப் படுத்திருக்கின்றது.

அந்த உருவம் தூங்கவில்லை, உணர்வுகளெல்லாம் விழித்திருக்கக் கண்களை மட்டும் மூடியபடி; கால்களை முடக்கி; தன் துணையை — கடந்த ஐந்து நாட்களுக்குமுன் அதை இவ்வுலகில் தனியே விட்டு விட்டுப் பிரிந்து விட்ட ஜீவனைப்பற்றி; அந்த ஜீவன் தனக்கிழைத்த; தான் அதற்களித்த; தன்னால் அது பெற்ற அதனால் தான் உலகில் பெற்றுக் கொண்ட; பயன்களையெல்லாம் எண்ணி, எண்ணி, நெக்குருகிக் கொண்டு கிடக்கின்றது.

பதினெட்டு வயதில் படிப்பு ஏறாமல், வீட்டில் தடதாரி என்ற பட்டம்பெற்று; சிற்றன்னையால் அப் பட்டத்திற்களிக்கப்பட்ட ஹொனர் சையும் சேர்த்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய அந்த ஜீவன் வாழவேண்டும் என்று ஒரு நாள் எண்ணியது. வயிறு காயாமல் இருக்க அது தனக்கென ஒது துணையை ஒரு அன்புத் தாயினிடமிருந்து பிரித்தெடுத்தது. அன்று முதல் இன்று வரை கடந்த எட்டு வருடங் காலமாக உயிருக்குயிராக வாழ்ந்த அவை கடந்த ஐந்து தினங்கட்கு முன் ஒன்றையொன்று பிரிந்து விட்டன. ஒரு ஜீவன் உலகத்தை

விட்டுப் பிரிய இன்றென்று பிரிந்ததை எண்ணி; அதுவும் தானும் வாழ்ந்தவாழ்வின் சிறப்பைஎண்ணி மனம் வேதனையில் விம்ம, சுருண்டு கொண்டு கிடக்கின்றது.

தானும் அதுவும் சேர்ந்தது முதல் பிரிந்தது வரை முதலிருந்து முடிவுவரை அது தன் மனதில் எண்ணிப் பார்க்கின்றது. அதன் உதடுகள் எண்ணத்தை ஒலியாக்கி முணு முணுத்தபடியேயிருக்கின்றன அந்த முணு முணு ஒலியில் நடந்து முடிந்த கதையும பிரிந்த உயிரைப் பற்றிய நினைவுகளும், அந்தஜீவனின் தாபங்களும் ஓலங்களும விரவிக் கிடக்கின்றன.

இரவின் மோனத்தில் உருவத்தின் முணு முணு ஒலி தெளிவாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

"தம்பீ நீ சென்றுவிட்டாய்...... ஆயிரம் ஆயிரம் உறவுகள் அழிந்த போது உன்னுறவு என்னை இவ்வுலகின் ஒரு மனிதனுக்கியது......

என்னையும் இந்த உலகையும் மகிழவைத்தாய் நீ. மட்டுநகரினிலும், மாவலியின் கரையினிலும் மலைநாட்டிலும் மாவிட்டபுரத்திலும் தலைநகரிலும் திருமலையிலும் நாம் ஆடாத ஆட்டமுண்டா?

கதிரமலையிலும், நல்லையம்பதியிலும் நாம் ஆடி மக்களை மகிழ்விக்காத விழாக்கள் உண்டா...

ஈழத்தின் ஒவ்வோர் மூலையையும் கண்டு நமமை காண வந்தவர்கட்கெல்லாம் நகைச்சுவை மகிழ்வைக் கொடுக்காத நாட்கள உண்டா...?

தம்பி பாலு......நான் தவிக்கிறேன். நீ...?

சுற்றிய உலகைவிட்டு, சூழ்ந்த மனிதரை விட்டு உன்னைக் கட்டிய என் கரங்களை விட்டு அறிவிற்கு அப்பால் என்று அகிலத்தார் கூறுகின்ற ஒரு உலகிற்கு நீ சென்றுவிட்டாய்.

ஆனல் நான்......

ஓடித்திரிந்த இந்தப் பரந்த உலகத்தில் ஒரு முடுக்கில் இந்தப் பொந்தில் காலிருந்தும் இல்லாதவனுக, கண்ணிருந்தும் அற்றவனுக, வாயிருந்தும் பேசாதவனுக மாழ்கின்றேன். நாட்கள் ஐந்து நகர்ந்து விட்டன. என்னைப் பொறுத்த வரையில் ஐந்து யுகங்களே மறைந்து விட்டன பாலு.

பாசம் என்ற சொல்லிற்கு இலக்கணமாயிருந்தவள் உன் தாய். அவள் உன் மேல் கொண்டிருந்த பாசத்திற்கு அன்று நான் பரிவு காட்டினேன். அதன் பலன் நீ வந்தாய். காலம் ஓட ஓட, சக்கரமாக நம் வாழ்க்கை சுழலச் சுழல நமக்கிடையே ஏதோ ஒன்று பற்றிப் படர்ந்தது. அதுதான் பாசம். பாசத்தின் அருமையைப் பிரிவின் போதுதான் அனுபவிக்க முடியும் என்பார்கள். உண்மை பாலு. முற்றிலும அது உண்மை பாலு......

பாலு...என் தலையணைக்கடியில் உள்ள அலங்கார உடைகள் என் தலையை உறுத்துகின்றனவே...... அந்த உறுத்தல் உன்நினைவை நெருடிக் கொண்டேயிருக்கின்றதே.. என்ன செய்வேன் பாலு? நீயில்லை. ஆனல் உன் நினைவு என்னேடு நிழலாய்த் தொடர்ந்து கொண்டிருக்கின்றதே.

தம்பீ!......

நீ உத்தமன். உலகோரால் விரும்பப்பட்டவன். உன்னில்அன்பு கொள்ளாத சிறுவனே சிறுமியோ குமரனே குமரியோ கிழவனே கிழவியோ இந்த நாட்டில் இல்லையே பாலு.

கதிர்காமப் பதியில் நீ செய்த கூத்துக்களை நினைத்தால் இப்பொழுதுகூட எனக்குச் சிரிப்பு வருகின்றது பாலு......

மூன்று வயதுப் பாலகன் நீ. மொழி விளங்காதவன் நீ. மாபெரும் பக்தர் கூட்டத்தின் நடுவே நீ கண்களை மூடித் துயில்கிருய். உன்னருகே நானிருக்கின்றேன். எங்

களது வயிற்றுப் பிழைப்பு அங்கே நடக்கிறது

நான் சொல்கிறேன் 'தம்பி பாலு உன்னை கொண்ணை வந்து நிற்கிறார் எழும்படா' என்று நீ எழும்பவில்லை.

'கொப்பரும் குவாச்சியும் வந்திருக்கினம் கெதியாய் எழும்படா". நீ புரண்டு படுத்துக்கொள்கிறாய். ஆனால் எழும்பவில்லை.

'பெண்டாட்டியெல்லே கூப்புடுறா' சே... நீ அப்பொழுதும் விழிக்கவில்லை.

நான் கடைசியாகச், அதுவும் விளையாட்டாக, சொல்லுகின்றேன். 'டேய் பாலு உன்னை கள்ளக்காதலி ராணி கூப்பிடுறா' கெதியா எழும்பு,

நீ அவசரமாய்த் துள்ளி எழும்புகின்றாய் சுற்றிச் சுற்றிப் பார்க்கின்றாய். முருகபக்தர்களைத் தவிர வேறெவரையும் அங்கு காணவில்லை. இருந்தாலல்லவா நீ காணமுடியும்?

கூட்டம் விழுந்து விழுந்து சிரிக்கின்றது. பலன்...? பத்து ரூபாவுக்கு மேல் தட்டில் சேர்கிறது.

மாவிட்டபுரத் தேரின் போது யாரோ ஒரு பக்தர் அடியளித்ததைப் பார்த்து நீயும் அடியளிக்க முற்பட்ட போது நான் கொண்ட மகிழ்ச்சி சொல்லுந்தரமன்று பாலு.

உண்மையைச் சொல்லுகின்றேன் பாலு... இந்த இயந்திர உலகத்திலே ஆயிரத்தில் ஒருவனுக்குத்தான் நண்பன்—உண்மையான நண்பன்—உண்டு... நூற்றில் ஒருவருக்குத்தான் உண்மையான தாய்ப்பாசம் தந்தைப்பாசம் கிட்டுகின்றது. பெற்றபாசம், பெற்றபாசம் என்பார்களே...அதெல்லாம்அன்று. ஆனால் இன்றோ...மிருகத்திலும் கேவலமாகப் பெற்றுவிட்டு பால் கூடக் கொடுக்காமல் குழந்தையைத் தவிக்கவிடுகின்ற தாய்ப் பாசம் விரவிக்கிடக்கின்றதே...பாலு..சகோதர பாசம் இந்த உலகில் செத்தே விட்டது ஆனால் பாசங்கள் எல்லாம் பறந்துவிட்ட இவ்வுலகில் எல்லாப் பாசங்களும் ஒன்று திரண்டு இருவரிடம் அடைக்கலம் புகுந்தனவே,

அது யாரிடம் பாலு? வேறு யாரிடம்? எங்களிடம் தான் பாலு அவை அடைக்கலம்புகுந்திருந்தன.

ஒன்றை இன்னொன்று வியாபித்துக் கொண்டிருக்கும் போது அங்கு இன்னொன்று புதிதாய் வேரூன்ற முடியாது பாலு அதே போலத்தான் உன் நினைவு என்னில் வியாபித்திருக்கின்ற இவ்வேளையில் எனக்கு இன்னொரு புதிய துணை ஏற்படப் போவதில்லை.

நாங்கள் வாழ்ந்தோம்வளமான வாழ்க்கை. நாம் கண்டோம் பாசத்தின் சிறப்பை. நாம் அளித்தோம் பிறருக்கு மகிழ்ச்சியை.வாழ்ந்தோம். பலன் கண்டோம். பிறருக்குக் கொடுத்தோம்.

எம்மால் வாழக்கூடிய எமது வாழ்க்கை முற்றுப்பெற்றுவிட்டது அந்த வினைமுற்றை அறிவிக்க நீ முன்னால் சென்றுவிட்டாய். அதன் அடிச்சுவட்டைப் பற்றி நானும் புறப்படுகின்றேன். வருகிறேன. பாலு. நீ அங்கிருப்பாய் என்ற துணிவில்...

இதுவரை முணுமுணுத்த அந்த உருவம் எழுந்துவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் தூரத்தில் சீறிக் கொண்டு வரும் லாரியில்...

இதோ......


கிரீச்...ஆ....பாலு...வருகின்....றே...ன்...

கதை முடிந்து விட்டது.

அடுத்த நாட் காலையில் ஊரார்கள் பேசிக்கொண்டார்கள்: பாருங்களேன் பாசமெண்டால் எப் 'படிப் பட்டதெண்டு.ஐஞ்சு நாளைக்கு முன்னை அவன் வளர்த்த குரங்கு இந்தச் சந்தியில் லொறியில் அடிபட்டுச் செத்தது. நேற்று அது வளர்த்தவனும் இதே இடத்தில் லொறியில் அடிபட்டுச் செத்துட்டான்."

'ஓமோம் வளத்த பாசம் சும்மாவே' — எல்லோரும் வாயில் வந்ததைச் சொல்லித் தங்கள் அநுதாதைத் தெரிவிக்கின்றனர்

அந்தச் சந்து—இருண்டு கிடக்கின்றது. ❖




ஐயன்னு முருகையா, மயிலணி.

கே: கலை என்றால் என்ன?

ப: மாலைச் சூரியன் மேலைக் கடலுள் மங்கி மறைகின்றான்; வானத்துச் செம்மை வையத்து மாந்தரை மயக்குகின்றது. ஆனால் இக்காட்சி கலையன்று. இதே காட்சியைக் கை தேர்ந்த ஓவியக் கலைஞன் தன் தூரிகையின் உதவியால் அழகான வண்ணப் படமாக வடிக்கின்றான். அந்த எழிற்காட்சியில் நாம் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றோம். ஓவியக் கலைஞனின் இச்சீரிய படைப்பே கலையாகின்றது!

இ. அச்சுதன், திருநெல்வேலி

கே: வேண்டுவார் வேண்டுவதை ஈயும் இறைவன் நான் வேண்டுவதை ஏன் இன்னும் ஈயவில்லை?

ப: வேண்டுவார்க்கு எதை ஈய வேண்டும் என்பதையும் அதை எப்போது ஈயவேண்டும் என்பதையும் அந்த இறைவன் தெரிந்து வைத்திருப்பதால்!

எம். ஜீ. ஆர். பித்தன், நல்லூர்

கே: "சாந்தி" படத்தில் தங்களைக் கவர்ந்த கட்டம் என்ன?

ப: என் பதில் தங்களின் மனத்தைச் சாந்தியடையச் செய்யாது. எனினும் உண்மையைச் சொல்லத்தானே வேண்டும்? "சாந்தி"யில் என்னை நன்கு கவர்ந்த கட்டங்கள் மிகப் பல! ஒன்றை மட்டும் தனியாகக் குறிப்பிட்டு, மற்றவற்றின் சிறப்பைக் குறைக்க நான் விரும்பவில்லை.

மா. கேசவன், திருகோணமலை.

கே: கடந்தஐந்து ஆண்டுகளாக ஈழத்து இலக்கிய உலகில் ஒரு மறுமலர்ச்சி தோன்றியிருக்கிறது என்கின்றேன் நான். இல்லை, இந்திய இலக்கிய வளர்ச்சியைவிட ஈழம் தரம் குறைந்தது என்கின்றான் என் நண்பன். இதில் யார் சொல்வது சரி?

ப: தங்கள் நண்பர் இருப்பதைச் சொல்கின்றார்; தாங்கள் இருக்க வேண்டியதைச் சொல்கின்றீர்கள்!

**சைவ இளைஞன்:** ஆண்டிதழ்; இந்துவாலிபர் சங்கம், களபூமி, காரைநகர்.

**சை**வம் என்றும் வாழ்வது. எனவே அதை வாழச்செய்வதல்ல, வளரச்செய்வதே எமது தலையாய பணியாயிருக்கிறது என்பது காரை நகர் 'இந்து இளைஞர் சங்க' வெளியீடான 'சைவ இளைஞ'னைப் படிக்கும்போது தெளிவாகிறது.

சுவாமி சிவானந்தா, குன்றக்குடி அடிகளார், கி. வா. ஜகந்நாதன் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா புலவர் செல்வி க. பூரணம், க. சிவஞானசுந்தரம் B.A. செல்வி அன்ன லட்சுமி இராசையா, செல்வி. இராதா சோமசுந்தரம் B. A. கா. அருணாசல ஆசிரியர் என்பவரின் கட்டுரைகள் ஆத்மா, இறை, உள்ளம். உடல், ஞானம், வேதம் பற்றித் தனித் தனியே ஆராய்கின்றன.

ஆசிரியத் தலையங்கம் நோக்கற் பாலது. சைவத்தின் பிற்பட்ட நிலைமை, அதன் அத்தியாவசியத் தேவைகள், எமது உணர்வற்ற வாழ்வு என்பன நெஞ்சில் தைக்க எழுதப்பட்டிருக்கின்றன.

'இப்பொழுது ஈழத்தில் ஒவ்வொரு சைவரும் ஓர் ஆதீனமாகவே தம்மைக் கருதிக்கொள்கின்றார்கள். அவர்கள் வைத்ததுதான் சட்டம். இங்குள்ள சைவ மக்கள் தலைவனில்லாத சைன்யம்போல் ஆகி தங்களுக்குள் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் இன்றிப் பிளவுபட்டு, பலவீன மடைந்துவருகின்றார்கள்.' என்று தலையங்கம் கூறுவதையே நாமும் ஞாபகப்படுத்தி வற்புறுத்துகின்றோம்.

'சைவ இளைஞ'னைப் படிக்கும்போது எமக்கு ஒரு மத சஞ்சிகையின் அத்தியாவசியத் தேவை புலனாகிறது, இது ஆண்டுக்கொருமுறை வந்தாலும் அளப்பரிய தொண்டாற்ற அதற்கு ஆற்றலுண்டு. ஆமாம்! தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

மலரைச் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் வெளியிட்ட திரு. A. T. சம்பந்தன் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

ஒவ்வொரு சைவரும் இந்து வாலிபர் சங்கத்தினர்க்குப் பேராதரவு தர முன்வரல்வேண்டும்.

—ராஜசிவா

---

# பேரும் பரிசும் - 6

## சரியான விடைகள்

| | | |
|---|---|---|
| இழந்த சுவர்க்கம் | : | ஜோன் மில்ட்டன் |
| சாகுந்தலம் | : | காளிதாசர் |
| மாக்பெத் | : | செகசிற்பியர் |
| கீதாஞ்சலி | : | இரவீந்திரநாத தாகூர் |
| டாக்டர் ஷிவாகோ | : | பொறிஸ் பாஸ்டர்நாக் |

பரிசுபெறுவோர்

முதலாவது பரிசு : 10 ரூபா
ந. புவனேந்திரன்
இந்துக் கல்லூரி,
உரும்பராய்.

இரண்டாவது பரிசு : 5 ரூபா
மு. ஜெகதீஸ்வரி
388/4 நல்லூர்ச் சந்தை,
யாழ்ப்பாணம்.

மூன்றும் பரிசு : "கலைச்செல்வி" ஓராண்டுச் சந்தா.
எஸ். எம. ஜே. பைஸ்தீன்
"நூர் மஹால்"
சிலாபம்.

# மதிப்புரை

**புதினம்:** மாதமிருமுறை; ஆசிரியர்: வரதர்; விலை: 30 சதம் ஆண்டுச் சந்தா 7.50; முகவரி: 226, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

நாம் இருக்கும் இவ்விலங்கைத் தீவின் அன்றாட அத்தியாவசியச் செய்திகள் முழுவதையும் தினமும் அறிந்து கொள்கின்றோமா?—அடே யப்பா! அதற்கு எத்தனை பத்திரிகை களைப் படிக்கவேண்டும்...! இது இப்படியிருக்க உலகச் செய்திகளை யெல்லாமே அறிவதென்றால்...? விடுங்கள்! ஒரு மாதத்திய உலக விவகாரங்களையாதல் முழுமையாக அறிந்துகொள்ள இயலுமா? அதற் குத்தான் கால, நேர, அவகாசம் கிடைக்கிறதா? இந்தப் 'புதினம்' படித்தால் இச் சந்தேகங்களேற் படா.

ராஜசுலோசன யாழ்ப்பாணத்தி லிருக்கிறாராமே; எப்போது, ஏன் எப் படி வந்தார் என்பதெல்லாம் ஏராள மானோர்க்குத் தெரியாது. அதற்குப் 'புதினம்' வேண்டும்.

மகாவலியை வடக்கே திருப்பும் முயற்சிபற்றி எத்தனை கட்டுரை களைப் படித்திருப்போம்! ஆனால் அது இங்கு வருமா, வராதா என்ற அடிப் படையான இரண்டிலொன்று நிச்சய மாக எவருக்காவது தெரியுமா? 'புதின'த்தில் தேடவேண்டும்.

யாழ்மாவட்டம் பாலைவன மாகுமா என்பதற்குத் தகுந்த புள்ளி விபரங்கள் எந்தக் கட்டுரையில் கிடைக்கும்...? 'புதின'த்தில் வரும்.

இப்படியெல்லாம் ஒரே பத்திரிகை உதவுமானால் அதைச் செய்யும் மனிதரை மனதாரப் பாராட்...... சே! எல்லாரும்தான் பாராட்டிவிட்டுப் போகிறார்கள். இனி யும் அந்தக் கையாலாகாத் தனத்தை நாமும் செய்யக்கூடாது. அந்த மனிதருங்கூட, தமிழனின் பாராட் டுரைகளுக்காக ஆரம்பிக்கவில்லை என்பது புரிந்துகொள்ள வேண்டி யது. இல்லாவிட்டால் யாழ்ப்பாணத் திலிருந்துகொண்டு துணிச்சலுடன் இதைச்செய்ய முன்வந்திருக்கவே மாட்டார். இது சொல்லித்தெரிவ தில்லை. 'புதின'த்தைப் பார்த்து உணரவேண்டியது.

பெரிய மகாபாரதம், உயர்ந்த சிலப்பதிகாரம், அந்த இராமாயணம், மணிமேகலை, குண்டலகேசி, கலிங் கத்துப் பரணி, முத்தொள்ளாயிர[illegible] புறநானூறு, அது, இது எல்லா[illegible] எதையெதைச் சொல்கின்றனவோ[illegible] அவ்வயத்தனையும் இரண்டிரண்டே குறளடிகளில் இல்லையா? அதே போலத்தான் புதினமும்— ஒரு என் சைக்ளோபீடியா போல — தவறு! தவறு! 'புதினம்' வரதரின் பிறிதொரு 'பலகுறிப்பு'.

அரசியல், சமயம், அறிவியல், சினிமா, விளையாட்டு, பிரமுகர் பத் திரிகைகள் — இவ்வளவா? வாசகர் கள்கூட 'புதின'த்துள்ளே உளர். ஆண்டுதோறும் 'வால்யூம்'களாகக் கட்டிவைக்கலாம்.

திறமையான சேவை இதைத் தமிழரெல்லாம் பணம்கொடுத்து வளர்த்தல் வேண்டும்.

—புரவலன்.

## ஆறுதற் பரிசுகள்

1. நா. இந்திராதேவி, நாயன்மார்கட்டுச் சந்தி, யாழ்ப்பாணம்.
2. ச. புஷ்பதேவி, மே/பா. சீ. சபாபதி, தேவரானை, சுன்னுகம்.
3. சாதுல் புவாதா, B-13, மடவளை பசார், மடவளை.
4. சி. இரட்சநாதன், மே/பா. அ. சின்னக்குட்டி, வேலணை மேற்கு.
5. சபா. புஷ்பநாதன், மார்க்கட் லேன், சுன்னுகம்.
6. க. மகேந்திரன், ஊரதீவு, புங்குடுதீவு.
7. இ. வே. கந்தசாமி, நுணுவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி.
8. வே. பத்மசோதி, 107/5, பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு-12.
9. S. முத்துராஜ், பாலசுப்பிரமணிய ஸ்ரோர்ஸ், அட்டன்.
10. எஸ். எம். ஜே. கதீஜா பீவி, 1/18, சிங்கப்புர வீதி, சிலாபம்.
11. V பத்மகாந்தன், 388/4, நல்லூர்ச் சந்தை, யாழ்ப்பாணம்.
12. மா. பத்மாவதி, நாயன்மார்கட்டுச் சந்தி, யாழ்ப்பாணம்.

# பேரும் பரிசும்-7

**1ம் பரிசு : 10 ரூபா**

**2ம் பரிசு : 5 ரூபா**

**3ம் பரிசு :** "கலைச்செல்வி" ஓராண்டுச் சந்தா

ஆறுதற் பரிசுகள் : பன்னிரண்டு பேருக்குக் "கலைச்செல்வி" கார்த்திகை இதழ் அனுப்பிவைக்கப்படும்.

முடிவு திகதி : 20-10-65

தமிழ் வாசகர்களிடையே பிரபலமான ஐந்து நாவல்களின் பெயர்களைத் தருகின்றோம். அவற்றின் ஆசிரியர்களின் பெயர்களை நீங்கள் அஞ்சலட்டையில் மட்டும் எழுதி 20-10-65க்கு முன் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். வழக்கம்போற் பரிசு வழங்கப்படும். அஞ்சலட்டையில் எழுதாத பதில்கள் கவனிக்கப்படமாட்டா.

நாவல்கள்

1. கமலாம்பாள் சரித்திரம்.
2. சிவகாமியின் சபதம்.
3. நெஞ்சின் அலைகள்.
4. குறிஞ்சி மலர்.
5. திருச்சிற்றம்பலம்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:-

**கலைச்செல்வி**

புகையிரத நிலைய வீதி, சுன்னுகம்.

# ஜெம்ரா டீசல்ஸ்

பதிவு இல: 4649

**336, பருத்தித்துறை வீதி : நல்லூர்**

டீசல், மோட்டார், படகு இயந்திரங்கள் உழவுமெசின்கள், கார், டீசல் லொறிகள், ஸ்கூற்றர், நீர் இறைக்கும் இயந்திரங்கள், திருத்துவதிலும், ஒட்டு வேலைகள், ஸ்பிறே பெயின்டிங் புரிவெட்டுதல் மட்டப்படுத்துதல் ஆகியவற்றிலும் பிரசித்தி பெற்றவர்கள்.

இயந்திரப் பழுதினால் வழிகளில் தாமதிக்கும் இயந்திரங்கள் அந்த இடங்களில் பழுது பார்த்துக் கொடுக்கப்படும,

Regd No: 4649

# GEMTA DIESELS

**336, PT. PEDRO ROAD : : NALLUR**

---

உங்கள் அச்சுவேலைகளுக்கு

# ஆசீர்வாதம் அச்சகம்

32, கண்டி வீதி, : : யாழ்ப்பாணம்

**தமிழ், சிங்களம், ஆங்கிலம். சமஸ்கிருதம்**

ஆகிய நான்கு மொழிகளிலும்

அச்சிடக்கூடிய ஒரே இடம்!

**FOR YOUR PRINTING REQUIREMENTS**

# ASIRVATHAM PRESS

**32, Kandy Road,**

**JAFFNA.**

## களிப்புற்ற வாழ்க்கை சலிப்புற்றதா?

அதற்குக் காரணம்.

கல்யாண விஷயமா? காதல் விவகாரமா? கிரக தோஷமா? கீர்த்தி கேடா? குடும்பத் தகராறு? கூடுதல் கடனு? கெடுதல் வருகையா? கேடுகள் சேர்க்கையா? கைநஷ்ட வியாபாரமா? கொடிய எதிரியா? கோணல் வாழ்வா? கௌரவத் தாழ்வா? எதுவானுலென்ன?

நிவாரணம் பெற என் உதவியை நாடுங்கள்.

இலவச ஆலோசனைக்கு
எனக்கொரு கடிதமெழுதுங்கள்.

# பி. எம். திசநாயக்கா

(நான்கு கோயில்களின் தருமகர்த்தா)

**கண்டி ரோட் : கம்பளை**

போன்: 44



## நினைவு மலர்கள் வெளியிடுவோரே!
## பாடசாலை அதிபர்களே!
## புத்தக ஆசிரியர்களே!
## பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்

# சிறந்த 'புளக்'குகள்

செய்யவேண்டுமானுல்
எங்களுக்கு எழுதுங்கள்

# Sri Lanka Block Makers

131, MESSENGER STREET : COLOMBO.




தயாரிப்பாளர்கள்:-
**RVG பீடிக் கம்பெனி,**
34, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.


# ம. சி. சதாசிவம்

**இல. 222, கே. கே. எஸ். வீதி,**
**சுன்னாகம்.**

எங்களிடம் சகலவிதமான சாய்ப்புச் சாமான்களும், நவதானிய வகைகளும், மாட்டுத்தீன் வகைகளும், மற்றும் உரம், சீமெந்து முதலியனவும் மிகவும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

நாணயம்—உத்தரவாதம்—நிதானவிலை
எங்கள் இலட்சியம்

# M. S. SATHASIVAM

No. 222, K. K. S. Road, : CHUNNAKAM.